ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ௵ ஐப்பசி ௴ { ஸஞ்சிகை 10

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

210733

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

உலகில் அசைபொருள், (சித்) அசையாப்பொருள், (அசித்) ஈச்வரன் என்பன நமக்கு முக்யமான தத்துவங்கள். இவைகளில் முதலிரண்டும் ஈச்வரனின் அதீனத்திற்கு உட்பட்டவைகள். மூன்றாவது ஸ்வதந்த்ரமான தத்துவம். ஸர்வவிதத்திலும் ஸ்வந்த்ரமானது. முதல் இரண்டு தத்துவங்களிலும் இடங்கொண்டது. அவைகளை ஆக்கவோ காக்கவோ, அழிக்கவோ சக்தியுள்ளது. ஆகவே எக்காலத்திலுமவைகளில் அனுப்ரவேசித்திருக்கிறது. இதைத் தான்பகவதவதாரங்களில்ஸர்வவ்யாபியாகவுள்ள அந்தர்யாம்யவதாரம் எனக் கூறிப் போற்றுகிறோம். பரவ்யூஹாந்தர்யாம்யவதாரம் மானிடக் கண்களுக்குப் புலப்படாதவை. விபவாவதாரம் மானிடக் கண்களுக்குப் புலப்படக் கூடியவை. ஆனால் விபவாவதாரங்கள் ஏற்படுங்காலங்களில் மட்டுமே அக்காலத்து மக்களுக்கும், புலப்படக் கூடியவை.

‘...புல் பாமுதலா, புல் எறும்பு ஆதி ஒன்று
இன்றியே நல்-பால் அயோத்தியில் வாழும்
சராசரம் முற்றவும் நல்-பாலுக்கு உய்த்தனன்
நான்முகனார் பெற்ற நாட்டுளே’

என்ற ச்ரிய:பதியின் விபவாவதாரமான ராமாவதாரகாலத்தில் ஏற்பட்ட அநுபவம்.

‘பின்னானார் வணங்கும் சோதி’ என்றபடி விபவாவதாரகாலங்களில் இல்லாத நம்போன்றவர்களுக்கென்றே ஏற்பட்டவைகள்தான் அர்ச்சாவதாரங்கள். ஆகவே விபவாவதாரங்களைக் கண்டு ஸேவிக்காத நம் போன்றவர்களுக்குக் கேட்டு உணர்வதற்கும் ஓரளவு கண்டு களிப்பதற்கும், தெளிவு பெறுவதற்குமே உபயோகமாக (விபவாவதாரகாலத்திற்குப் பின்னானவர்கள் வணங்கித் தொழுவதற்காகவே) ஏற்பட்டவைகள் அர்ச்சாவதாரங்கள்.

பகவதவதாரங்களில் தலைசிறந்தது நரஸிம்ஹாவதாரம் எனக் கூறுவது மிகையாது. ஈச்வரன் என்ற உயர்ந்த தத்துவம் சித்துக்களில் உள்ளடங்கியிருத்தலை (அந்தர்யாமியாக இருப்பதை) யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆனால் அசித்தில் உள்ளடங்கி இருப்பதை ஒப்புக்கொள்ளவும், தெளிவுபடவும் நரஸிம்ஹாவதாரம் உதவுகிறது. ஸர்வவ்யாபி என்பது இதுவேதான். ஸாதாரண பிறவியற்றிருப்பது முதலிய பலவித சான்றுகளால் உயர்ந்த அவதாரவிசேஷமுமிதுவேதான். ‘புக்க அரி உருவாய், அவுணன் உடல் கீண்டு உகந்த சக்கரச் செல்வன்’ என்று ஆழ்வார் மங்களாசாஸனம் செய்தார். இதே விபவாவதாரத்தைத்தான் ஆழ்வார் ‘நல்லை நெஞ்சே நம்பெருமான் நமக்கு அருள்-தான் செய்வானே’ என்றும் அநுஸந்திக்கிறார். இப்பேர்ப்பட்ட மஹிமையையுடைய ஸ்ரீ ந்ருஸிம்ஹன் தானே ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுக்கு ப்ரைஷமந்த்ரோபதேசம் செய்தருளி நமக்கு ஸ்ரீ ஸந்நிதியை ஸ்தாபித்துக் கொடுத்தாரென்றால் ‘நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால் என் செய்யோம்? இனி என்ன குறைவினம்? மைந்தனை மலராள் மணவாளனைத் துஞ்சும்போதும் விடாது

தொடர் கண்டாய்' என்று ஆழ்வார் அநுஸந்திப்பதென்பது நமக்குத்தானேயல்லவா?

ஸ்ரீ ந்ருஸிம்ஹனைப் பரமாசார்யனாகவும், ப்ரதமாசார்யனாகவும், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை அத்விதீயவிபவாசார்யனாகவும் பெற்றுள்ளோம் என்றால் நமக்கு என்ன குறைவிருக்க முடியும்?

இம்மஹாபுருஷன் ஜனித்தமாதம் புரட்டாசி. **'कलौ वेङ्कटनायकः'** என்று கலிகாலத்தில் கண்கண்ட தெய்வமாகிய ஸ்ரீநிவாஸன் அவதரித்த மாதம். ஸ்ரீ வேங்கடேசாவதாரோயம் என்ற ஸ்ரீ வேங்கடேசனுடைய அவதாரவிசேஷமாகிய தூப்புல் குலமணியாகிய ஸ்ரீ வேதாந்ததேசிகர் அவதரித்த மாதம். ஆகையாலேயே இம்மாசத்தின் மஹிமை இன்றுகூடக் குறையவில்லை.

'मासानां मार्गशीर्षोऽहं' என்ற ஸ்ரீபகவத் வாக்யத்தையநுஸரித்து மார்கழி மாதம் எப்படிப் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறதோ அதே போல் புரட்டாசி மாதத்தையும், அம்மாதத்தின் ஸ்திரவாரங்களையும் யாவரும் மறப்பதென்பது முடியாது.

வெளித் தோற்றத்திற்கு நாஸ்திகர்கள் போல் தோன்றுபவர்களும், வாது புரிபவர்களுங்கூட, புரட்டாசி சனிக்கிழமைகளை பூஜ்ய தினங்களாகக் கருதி உபவாஸாதிகள் அநுஷ்டிப்பதை இன்றுகூட நாம் காண்கிறோம்.

இம்மாதிரி ஸமயத்தில் நமக்கு மற்றொரு விஷயமும் மனத்திற் படுகிறது. வெளித் தோற்றத்தில் காணப்படுவதுபோல அவ்வளவு அளவிற்கு நாஸ்திக்யம் ஏற்பட்டுவிடவில்லை. ஆஸ்திக்யம் உள்ளடங்கி இருக்கிறது. அதைத் தட்டி எழுப்பவேண்டியது நமது கடமை.

நமது மக்களிடம் ஆஸ்திக்யத்தைப் பரப்புவது பல வழிகளில் முடியும். அவைகளில் முக்யமானதுதான் தேவாலயங்களின் புனிதத் தன்மை. அர்ச்சாவதாரங்களின் மஹிமைகளை இங்கேதான் கண்டு களித்து நல்மார்க்கங்களைக் கற்றுக்கொள்கிறோம். புராதன காலங்களில் இவைகள் பெரிதும் பயனளித்தன. நாளடைவில் இப்புனித ஸ்தலங்கள் பலவிதங்களில் பாழடையவாரம்பித்திருக்கின்றன. இன்னுங்கூட புராதனத்தின் சின்னங்களாகவும், புனித நிலையங்களாகவும் பல திகழ்கின்றன என்றால் அதுவும் நமது பாக்யமே. அதனால்தான் நாடு இன்னும் செழிமையுடன் விளங்குகிறது.

இப்புனித ஆலயங்களை மேன்மேலும் அபிவ்ருத்தி செய்யவேண்டிய ஸந்தர்ப்பங்களில் இவ்வாலயங்களின் வழிபாடுகளையும் குறைத்து பூஜை, நிவேதநம் இவைகளில் சிக்கனங்களைக் கைப்பிடித்து, ஆலயஜீர்ணோத்தாரணங்களையும் ஒத்திப்போட்டு மிச்சப்படுத்துந்துகையை நாட்டு நலன் என்று சிலர் எண்ணும் வகைகளில் செலவு செய்ய பலர் ஆசைப்படுகிறார்கள் என்றால் அவர்களுடைய மனோநிலையைக் குறித்துநாம்வருந்துவதைத்தவிர என்ன செய்ய முடிகிறது. உலகத்திற்கு இவர்களே ஏதோ நன்மையைச் செய்துவிடுவதாகவும் நன்மையை நிலைநிறுத்தப் போவதாகவும் எண்ணுகிறார்கள். 'அன்றுமுதல் இன்று அறுதியா வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பது இல்லை' என்பதை இவர்கள் அறியமுடியவில்லை.

உலகந்தோன்றியதுமுதல் அநேகவித ராஜ்யங்களும், பற்பலப் போக்குடைய அரசர்களும், பலவிதமான நாகரீகங்களும் இருந்திருக்கின்றன. பல தோன்றின. பல மறைந்தன. மறைந்தவிடங்களில் பல புதியன புகுந்தன. இவைகளையெல்லாம் சரித்திரவாயிலாகவும், நேரிலும் கண்டுகொண்டேயிருப்பவர்கள்கூட இவைகள் ஸ்திரமற்றவைகள் எனக் கண்டுகொள்ளமுடியாமல் இருக்கிறார்கள்.

ஆனால் மதக் கோட்பாடுகளும், மதப் பற்றும் எக்காலத்திலும் எங்கும் நிலைத்து வந்திருக்கிறது என்பதை எவரும்மறுக்கமுடியாது. மதங்கள் பல தோன்றியுள்ளன என்பது உண்மை. ஆனால் அவைகளின் அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றேதான். **'अहिंसा परमो धर्मः'** (ஜீவஹிம்ஸை தவிர்ப்பதே உயர்ந்த தர்மம்) **'सत्यमेव जयते'** (ஸத்யமே வெற்றியடைகிறது) **'धर्मान्न प्रमदितव्यम्'** (தர்மத்திலிருந்து

நழுவிவிடக்கூடாது) என்பவைகள் புராதன மான வைதிகமதத்தின் உயர்ந்ததத்துவங்கள். இவைகளையேதான் பௌத்தமதமும் ஜைன மதமும் முக்கியக் கொள்கைகளாக எடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை யார் மறுக்க முடியும்? இப்புதிய மதங்களுக்கு இவைகள் தான் அடிப்படைத் தத்துவங்கள். உலகில் எந்த மதத்திற்குத்தான் இக்கொள்கைகள் தத் துவங்களில்லை. எக்கொள்கைகள் புராதன மான (ஸநாதன) ஹிந்துமதத்தின் உயர்ந்த நோக்குகளோ, அவைகளைத்தான் எல்லோரும் பின்பற்றியிருக்கிறார்கள்.

மதக்கோட்பாடுகளுக்கு அநுகுணமாக ஆசாரங்களையும், அநுஷ்டானங்களையும் முன் னோர்கள் வகுத்துக்கொண்டார்கள். அதைச் சிலரே பின்பற்ற முடிந்தது. பலரால் பின் பற்ற முடியவில்லை. சரீரப்ரயாஸையோ, மனோவலிமையோ இவர்களிடம் இல்லை. அதன் காரணமாக இவர்கள் மனோவலிமையுடையவர் களை வெறுப்புடன் நோக்கவாரம்பித்தனர். அப்படியேற்பட்டதுதான் புத்தமதம்போன் றவைகளும்.

மனோவலிமையுடையவர்களும் நாளடைவில் மனோவலிமையை இழக்கவாரம்பித்தனர். கடுந் தபஞ்செய்யும் சக்தியுடைய விச்வாமித்ரர்கூட தபஸ்ஸிலிருந்து வழுவியதுபோல் பலர் மனோ நிலை தடுமாறி தீயவழிகளில் செல்லவாரம்பித்த னர். நாளடைவில் இது அதிகரித்தது. தத் காலம் இப்புராதனக் கொள்கைகளைப் பின் பற்ற முயற்சிப்போரையே வெறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மாதிரியான தீயநிலையை நடு நிலைமை வகிக்கும் அரசாங்கமாவது தடுக்க வேண்டும். புத்திசாலிகளான பிள்ளைகளிடம் அன்புகொள் வதை விலக்கிவிட்டு மந்தபுத்திகள் வெறுப்பது போல் ஆஸ்திகர்களை பல பொதுஜனங்கள் நன்கு மதிக்கவில்லை. அதே ஸமயம் புத்தி சாலிகளை விரும்பவேண்டிய ஆசிரியரே இவர் களை உத்ஸாஹப்படுத்தாமலும், மந்தபுத்திக ளைத்தான் விரும்புவது போலவும் நடந்து சொள்கிறார் என்றால் ஆசிரியரின் பெருமை யையோ பிற்கால ஜனங்களின் போக்கையோ நாம் என்னென்று கூறுவது?

எப்படி இருப்பினும் தீயசக்தியைக் கண்டு அறிவாளிகள் அஞ்சிவிடுதல் முறையாகாது. தங்களுடைய முழுத்திறனையும் உபயோகித்து தீயசக்திகளைத் தடுத்து நல்வழிகளை சீர்படுத்த வேண்டியது அவசியம். அதேபோல்தான் தத்காலம் ஏற்பட்டுள்ள அவைதிகமான சூழ் நிலையை அகற்றவும் முயற்சித்தல் அவசியம்.

எங்கெந்த இடங்களில் உண்மையான பக்தி சத்தியம், சாந்தம் இவைகள் காணப்படுகின் றனவோ அவைகள் அழிக்கப்படாமல் காப் பாற்றப்படவேண்டியது மிகவும் அவசியம்.

தத்காலம் தேவாலயங்கள் புராதனபண்பா டுகளையும், ஆசாரானுஷ்டானங்களையும் புராதன காலம் போலவே முழுவதும் வெளிப்படுத்தா விடினும் அவைகள் உண்மையான பக்திபெருக் குக்கு ஸமூஹநலனுக்கு உகந்த ஸ்தலங்கள் என் பதை அநுபவசாலிகள் எவரும் மறுக்க முடி யாது. அதுமட்டில் அல்ல. ஸமூஹநலனுக்கு மிகவும் அவசியமான அமைப்புக்கள். அம்மா திரியான நிலையில் அவைகளை அபிவ்ருத்தி செய்யாமலும், ரக்ஷிக்காமலும் இருப்பது விரும்பத்தக்கதேயில்லை. உண்மை இம்மாதிரி இருக்க அவைகளை ஏதாவதொரு மார்க்கத்தில் கேவலப்படுத்தவும், அழிக்கவும் முற்படுவது, அப்படி முற்படுவோரைக் கண்டிக்காமல் அவர் களுக்கு உதவுவது முதலியவை நமது நாட் டின் சீர்கேடான நிலையை வெளிப்படுத்து கிறது.

இம்மாதிரி நிலவரங்களைக் கண்டு அறிவாளி கள் கலங்கிவிடமாட்டார்கள். அறிவாளிகளை உத்ஸாஹப்படுத்தவும், மிதவாதிகளை பூர்ண அறிவாளிகளாக ஆக்கவும் நாம் பாடுபடவேண் டியது அவசியம்.

இப்படி பலபடிகளில் வாழ்ந்துவருபவர்களை ஒன்றுக்கி நல்வழிக்குக் கொண்டுவருபவர்கள் தான் ஸமூஹநலனுக்குப் பாடுபடுவர்கள். அவர்கள் உண்மையான ஸமூஹத் தலைவர் கள். அவர்கள்தான் அறிவாளிகளின் தலைவர்

கள். அவர்களைத்தான் நாம் மதத் தலைவர்கள் என்றும், ஆசார்யர்கள் என்றும் கூறிவருகிறோம்.

இவ்வுலகவாழ்க்கைக்கு வேண்டிய அளவு அறிவுத் திறனை நமக்கு உண்டாக்குவதுடன் நிலையற்ற இவ்வாழ்க்கைக்குப் பிறகு ஏற்படும் நிலையுள்ள பேரானந்தத்தை நாம் அடைவதற்கும் வழி வகுத்துக் கொடுப்பவர்கள்தான் ஆசார்யர்கள்.

அம்மாதிரியான தொல்வழியே வந்த நல்வழியை நமக்குரைத்தும், எக்காலமும் நமக்காகவே பாடுபடுவதற்காக வேண்டிய ஸம்விதானங்களைச் செய்தும், ஆசார்யபரம்பரைகளை நமக்கு அருளியும் உள்ள ஆசார்யச்ரேஷ்டர்களின் ஜயந்தியை நாம் எல்லோரும் ஆங்காங்கு வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து, கூடியிருந்து புகழ்ந்து நற்கதியையடைவோம். இறைவனும் ஆசார்யனும் அருள் புரிவானாக.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருப்ரதிஷ்டாமஹோத்ஸவம், பாதூர்,

நாளது துர்முகி ஞு ஆவணி மீ 4-ந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ப்ரஸன்னவேங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தை முன்னிட்டு ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்யமங்களவிக்ரஹத்தின் ப்ரதிஷ்டா மஹோத்ஸவம் வைகாநஸாகமப்படி செவ்வனே நடந்தேறியது. அவ்வமயம் வைகாநஸபட்டர் ஸ்ரீ. உ. வே. வளவனூர், நரஸிம்ஹபட்டாசாரியர் யதாக்ரமமாக நடத்திவைத்தார். மூன்று நாட்கள் முன்னதாகவே வேதபாராயணம் திவ்யப்ரபந்தம், ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தபாராயணம் முதலியவை தக்க அதிகாரிகளைக்கொண்டு நடத்திவைக்கப்பட்டன. மூன்றுந்தேதிமாலை ஸ்ரீ. உ. வே. திருவஹீந்திரபுரம் ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியால் 'ஆசார்யவைபவம்' என்னும் விஷயமும் மறுநாள் ராத்ரி 'தொண்டரடிப்பொடியாழ்வார் திவ்யசரித' கதாகாலக்ஷேபமும், உபந்யஸிக்கப்பட்டது. 4-ந்தேதி மாலை 3-மணிக்கு ஸாரஸாரஜ்ஞ ஸ்ரீ. உ. வே. பெருக்காரணை, சக்ரவர்த்தியாச்சாரியர் ஸ்வாமியால் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் வைபவம்பற்றி உபந்யஸிக்கப்பட்டது. பிறகு மாலை 6-மணிக்கு ஸ்ரீப்ரஸன்னவேங்கடசப்பெருமாள் சேஷவாஹனத்திலும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருச்செவியிலும் எழுந்தருளி வீதி உத்ஸவம் கண்டருளினார்கள். ராத்ரி ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டு உத்ஸவம் இனிது முடிந்தது. ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் இரண்டு திவ்யமங்களவிக்ரஹங்களையும் பரமக்ருபையுடன் அநுக்ரஹித்த ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதியில் அக்ரஹாரவாஸிகளினநந்தகோடிப்ரணாமங்கள்க்ருதஜ்ஞதாபூர்வம் ஸமர்ப்பிக்கப்பட்டன.

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் அவதாரமஹோத்ஸவம் 9-10-56 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. மத்யாஹ்னம் விசேஷதிருமஞ்சனமும் ராத்திரி சாற்றுமுறை உத்ஸவமும் நன்றாக நடைபெற்றது.

V, சுந்தரம் ஐயங்கார்,
தர்மகர்த்தா

—:0:—

ஸ்ரீ:

கேள்வியும் - பதிலும்

ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி,
ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.

ஸ்ரீஸம்ப்ரதாயத்தில் 'பெரிய திருவுடையார்' என்று சிறப்புப்பெயர் பெற்றவர் ஜடாயு ஆவார். ராவணன் எடுத்துச்சென்ற பிராட்டியை பெருமாளுடன் சேர்த்துவைக்கப் பலர் பராக்ரமச்செயல்கள் புரிந்தனர். அதில் ஸுக்ரீவமஹாராஜர், முன்பே பெருமாளிடமிருந்து தானொரு உதவியைப் பெற்று பெருமாளுக்குப் பதிலுதவி புரிந்ததவ்வளவே யுண்டு. ஸ்ரீவிபீஷணாழ்வான் அங்ஙனன்றேயாகிலும் 'இவன் இலங்கை அரசு பெறக்கருதி வந்தான்' என்றிவ்வாறு பல வானர முதலிகள் குற்றம் சாட்டும் நிலையில் நின்று ஸ்ரீராகவனை சரணம் பற்றினர். இவ்விதம் இருக்கும்பொழுது, ஸ்ரீஜடாயு புரிந்த த்யாகத்தை நன்கு பராமர்சிக்குங்கால் நமது மனம் அவர் செய்த கைங்கர்யத்தை நினைத்து உருகவே செய்யும். 'दाससखा वाहनम्......' என்றுபெருமாளுக்குப் பரமபதத்தில் பலவித பணிகள் புரிந்துவந்த பெரியதிருவடி (கருடன்) சக்ரவர்த்தித் திருமகனாக வவதரித்தபோதைக்கு பெருமாளுக்கு உதவப்பெற்றிலர். மநுஷ்யபாவனை கலைந்து போம் என்ற காரணத்தினால். இலங்கையில் நாகபாசத்தால் கட்டுண்டு வீழ்ந்தபோதும் வேறு வழியின்றி பெருமாளிடம், அதிகம் பரிமாறாமல், சிறிதே பேசி, தான் வந்த கார்யத்தை சுருங்க முடித்துத் திரும்பும்படியாயிற்று பெரிய திருவடிக்கு. அக்குறையை நீக்கி நிறைத்தவர் இஜ்ஜடாயு வென்னும் மஹாத்மா ஆகும். இவரும் ஒரு பக்ஷிராஜனேயல்லவா? பஞ்சவடியில் பெருமாள் பிராட்டியுடன் ப்ரவேசிக்கும்போதே 'உம் பிதாவின் தோழன் யான். ஆகையால் உங்களை எந்நிலையிலும் காத்துவருவதே என் பணி; என்னை நம்பி ஏற்றுக்கொண்டருளவேணும்' என்று கால் கட்டி ப்ரார்த்தித்துப் பின் தொடர்ந்தார் அம்மஹோபகாரி.

ஸ்ரீஸ்வாமி தேசிகன், இவருடைய த்யாகத்தை, ஓர் சாதுர்யம் கலந்த செய்கையாகச் சிறப்பித்து அருளிச்செய்யும்படி இருக்கிறது. ஸ்ரீஜடாயு, தனது உயிரைக் கொடுத்து நிலை நின்ற கீர்த்தியை பெற்றார். உயிர்வாழ்க்கை மின்னினும் நிலை நில்லாதது அல்லவா? நாம் விரும்பாவிடினும் அது ஒரு நாள் அழிந்து படுவது நிச்சயம். ஆக நாமே விரும்பி ஓர் நற்காரியத்துக்கு அதை அர்ப்பணம் செய்தால், அதன் பயனாய் நீடித்துப் பெயர் நிலை நிற்கும் என்று பெரும் பேறுபெற ஸந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகையால் ஸ்ரீஜடாயு பிராட்டிக்காக பூதவுடல் தந்து புகழ் உடம்பு எய்தினார் என்று ஸ்ரீஸ்வாமியின் அநுஸந்தானம் 'विक्रमयशोलाभविक्रीतजीवितगृध्रराज' என்ற ஸூக்தியில் வெளிப்படுகிறது.

இஜ்ஜடாயுவின் ஆவி பிரியுங்கால் நிகழ்ந்த ஓர் பரிதாபகரமான ஸம்பவம் நாம் மேல் சொல்ல நினைத்த விஷயத்துடன் ஒருவிதத்தில் தொடர்புள்ளதாகையால் அதை இங்கு முதலில் கூறவேண்டியதாகிறது. பிராட்டியைப் பிரிந்து தேடி அலைந்து வரும் பெருமாள் ஸ்ரீஜடாயுவைக் கண்டார். அவர் வாயிலாக, பிராட்டியின் சேதியை, மெள்ள மெள்ள சொல்லக் கேட்கிறார். ஆவி பிரியும் தருணமாயினும் ஜடாயுவுக்கு அதுவரை அதிகமான மதிமயக்கம் ஏற்படவில்லை. கோர்வையாக நடந்த விஷயங்களைச் சொல்லிவருகிறார். இவ்விதம் பெருமாள் சிறுகச் சிறுக விஷயங்களைக் கேட்டுவரும்போது 'असंमूढस्य गृध्रस्य रामं प्रत्यनुभाषतः। आस्यात्सुस्राव रुधिरं म्रियमाणस्य सामिषं' என்ற

படி ஓர் அபாக்யம் குறுக்கிட்டது. திடீரென உள்ளிருந்து மாம்ஸம் கலந்த உதிரம் கக்க பக்ஷிராஜன் மயக்கம் அடைந்தார். அப்பொழுது அவர் வாயினால் உச்சரித்த 'पुत्रो विश्रवसस्साक्षात्भ्राता वैश्रवणस्य च' என்ற வார்த்தை- ராவணனைப் பற்றிக் கூறவந்தது, அவன் இருப்பிடத்தை - பெருமாளுக்கு முக்யமாகத் தெரிய வேண்டியதைத் தெரிவிக்கும் முன்பே அறுந்தது முடிந்தது. இக்காலத்தில் ‹டெலிபோன்' என்னும் கருவியில் பேசிக் கேட்போர் சிற்சில ஸமயங்களில் ஸங்கடமுறுவதேபோல், பெருமாளின் ஸங்கடத்தையும் ஆவலையும் உணர்ந்த ருஷி, ‹ஐயோ இதென்ன சோதனை' என்று விசனிக்கின்றார், 'ब्रूहि ब्रूहीति रामस्य ब्रुवाणस्य कृताञ्जले:' 'இன்னும் கொஞ்சம் சொல்லும் சொல்லும்' என்று கைகூப்பித் தொழுகிறாராம் ஸ்ரீ ராகவன் பக்ஷியை. ஆனாலும் நடந்ததென்னவோ இதுதான். 'इत्युक्त्वा दुर्लभान् प्राणान् मुमोच पतगेश्वर:'

இவ்விதம் நிகழாமல், ஸ்ரீராமசந்த்ரனின் மனோரதப்படி முற்றும் சொல்லி க்ருத்ரராஜன் தேஹத்யாகம் செய்திருந்தால், ஸ்ரீராம சரித்ரம் பலவிதமாக மாற்றி எழுதப்பட வேண்டிவரும். ஆயினும் இவ்வாறு சிறு ஸம்பவங்களே பெரும் மாறுதல்களுக்குக் காரணமாகின்றன என்ற உலக இயற்கைக்கு, மஹா புருஷ சரித்ரங்களும் விலக்கல்ல. ஸ்ரீஜடாயு மனதில் என்ன சொல்ல நினைத்தார். முற்றும் பேசியிருந்தால் அது எவ்விதம் இருக்குமோ என்று கதை கேட்பவர்களில் சிலர் சிந்தனை செய்வார்கள். இதுவும் இயற்கையே. மஹர்ஷி இவ்விதம் சிந்திப்பவர்களையும் வெகுதூரம் இட்டுச் சென்று தக்க பதில் அளிக்கிறார்.

வானரமுதலிகள் பிராட்டியை உலகம் முழுவதும் தேடி ஸுக்ரீவ மஹாராஜர் இட்ட காலகெடுவும் தாண்டி, மனச்சோர்வுற்று ஓரிடத்தில் ‹ப்ராயோபவேச'த்திற்காக கூடினபோது ‹ஸம்பாதி' என்னும் ஜடாயுவின் தமயனாகிய பக்ஷியை ஸந்திக்கிறார்களல்லவா? அப்போது ஸம்பாதி தன்னுடைய கூரிய கண்பார்வையின் பயனாய் இலங்கையில் பிராட்டியின் இருப்பை இங்கிருந்தவாறே கண்டு கூறும் ச்லோகம் நன்கு கவனித்து ரஸிக்கத்தக்கது. மஹர்ஷியின் சாதுர்யம் எல்லையையும் கடந்து நிற்கிறது. அதை அநுபவித்து நமக்கு விளக்கியுள்ள நமது பூர்வாசார்யர்களின் ஆழமான மேதையும் ச்லாகிக்கத்தக்கது. தமையன், விட்ட கார்யத்தை பூர்த்திசெய்ததுபோலவே, தம்பி கூறாது விட்ட ச்லோகத்தையும் தமையன் பூர்த்தி செய்கிறான். முன்பு ஜடாயு கூறின 'पुत्रो विश्रवसस्साक्षात् भ्राता वैश्रवणस्य च' என்ற அதே அடியை திரும்பக் கூறி, 'अध्यास्ते नगरीं लङ्कां रावणो नाम राक्षस:' என்று மேலும் ஒடியைச் சேர்த்து ஸம்பாதி சேஷபூரணம் செய்த அழகே அழகு. வாசக மஹாசயர்களுக்கும் இவ்விடம் வந்தவாறே ‹ஜடாயு கூறியிருந்தாலும் அது இவ்விதமே இருக்கும்' என்று தாங்கள் முன்புகேட்ட கேள்விக்கு பதில்கிடைத்து விடுவது திண்ணம்.

இவ்விதம் மஹாகவிகளின் படைப்பாகிய இலக்கிய உலகில், ஒரு கவியின் நூலில் ஓரிடத்தில் உதிக்கும் கேள்விக்கு அக்கவியே மற்றோரிடத்தில் பதில் கூறிச்செல்வதும், அதை காவ்யரஸிகர்கள் கண்டுகொண்டு பரமாநந்தமெய்துவதும் பல உதாஹரணங்கள் மூலம் விளக்கலாம். இப்பொழுது ஸ்வாமிதேசிகனின் ஸ்ரீஸூக்திகளில் இவ்வித அநுபவம் சிறிது பெறுவோம். பக்தர்களுக்குத் தன்னைக்கட்டவும் அடிக்கவும் எளியனாக அமைத்துக்கொண்ட கண்ணபிரானின் கீர்த்தனத்துக்காக ஏற்பட்ட ஸ்வாமி தேசிகனது ‹கோபால விம்சதி' அவனைப்போலவே மிகவும் ஸரளமாய், எளியதாய், கற்காதாரே இல்லை என்னும்படி ஸ்ரீஸம்ப்ரதாயத்தவரிடையே வெகுவாகப் பரவியுள்ளது. அதில் ஸ்வாமி ஓரிடத்தில் ஐயுறுகிறார் ‹என் மனத்திரையில் மதன கோபாலனை சிறப்பாக சித்தரித்த சில்பி யாரோ? எத்தகையவரோ' என்று. 'हृदिमुग्धशिखण्डमण्डनो लिखित: केन ममैष शिल्पिना । मदनातुरवल्लवाङ्गनावदनाम्भोजदिवाकरो युवा' ஹ்ருதி = வெளியில்

சுவரில் எழுதுவதுபோல், அத்தனை எளிதோ மனத்தகத்தே எழுதுவது? முக்தசிகண்ட மண்டந: = கருங்கண்மயில்பீலி அணிந்தல்லவா என் கண்ணன் அதில் காட்சி தருகிறான். லிகித: கேந சில்பிநா = யார் எழுதியதோ? ஸாமாந்யர்க்கு ஸாத்யமல்லாத கார்யமாய் இது இருந்தது. அதனால் சில்பசாஸ்த்ரம் கைவந்தராக வேணும். மம = பல விஷயங்களில் பாலிபாயும் சாபல்யமுடைய என் மனம் உறுதியாய் நில்லாது; ஏஷ: = 'वृक्षे वृक्षे च पश्यामि' என்று மாரீசன் என்னும் நீசன் ஸ்ரீராகவனை நேரில் கண்டாற்போல், யானும் 'இதோ' என்று கையிட்டுக்காட்டலாம்படி ப்ரத்யக்ஷமாய் இருந்தது, மதநாதுரேத்யாதி = ஸூர்யனைக்காணாது ஓர் தாமரை மலர் வாடி வதங்கி யிருக்க, அப்பொழுது அது ஸூர்யோதயத்தால் அகம் மகிழ, முகம் மலர்ந்து காணப்படுவதுபோல், கண்ணனைக் காணாது கானகத்தில் பிரிந்து, தனித்திருந்து தவித்த இடைப் பெண்மணிகளுக்கு மனமும் மெய்யும் குளிரவந்து ஸேவை ஸாதிக்கும் அவன், யுவா = குழந்தைகள் தாயின் முலையில் வாய் வைக்குமாப்போல் அவர்களுக்கும் அவனுடைய யௌவனத்திலேயே நோக்கு. இவ்விதத் திருக்கோலத்தோடு கண்ணன் மனதில் ஸேவை ஸாதிக்கும்படி என்னுள் யார் வரைந்தார்கள் என்று ஸ்வாமி ஸந்தேகத்துடன் நிறுத்தியிருக்கும்படி.

இந்த ப்ரகாரணத்தை ஸேவிக்கும் பக்தர்களுக்கு இவ்விதமெல்லாம் மனதில் தோன்றக் கூடும். ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்வாமிக்கும் ஓர் ஐயப்பாடா? இன்னார் என்று ஓர் தெளிவு ஸ்வாமிக்கு அரிதா? அதை இங்கு ஸாதிக்காமல் போவானேன். மற்றெங்காகிலும் இக்கேள்விக்கு பதில் கிடைக்குமா? என்றவாறெல்லாம் கேட்பவர்கள் ஸ்ரீஸ்வாமி தேசிகன் இயற்றியருளிய 'யதிராஜஸப்ததி'க்குச் சென்று பார்ப்பார்களாக. ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமையும் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களின் மஹிமையும் உள்ளபடி உரைக்கும் உத்தம க்ரந்தமாகிய அதில் யதிராஜனின் வலது திருக்கையின் ஸந்நிவேசம் வர்ணிக்கப்படும் ச்லோகம் ஒன்றுள்ளது. எம்பெருமானார் வலது திருக்கையில் கட்டை விரலும் ஆள்காட்டி விரலும் சேர்ந்து கூடி இருப்பதன் தாத்பர்யம் இவ்விதம் விவரிக்கப்படுகிறது அதில். 'नाथस्स एष यमिनां नखरश्मिजालैरन्तर्निलीनमपनीय तमो मदीयम्। विज्ञानचित्रमनघं लिखतीव चित्ते व्याख्यानकेलिरसिकेन कराम्बुजेन ॥' உலகில் சித்ரம் எழுதும் சில்பி தாம் எழுதவேண்டிய இடத்தை வெள்ளைச் சுண்ணம் முதலியன பூசி அழுக்ககற்றி சுத்தம் செய்வர். பிறகு வலது கையில் இருவிரல்கொண்டு தூரிசு பிடித்து வர்ணமய சித்திரம் வரைந்திடுவர். ஸ்ரீபாஷ்யகாரரும் என் மனதை சித்ரம் எழுதப்பாங்கான இடமாகத் தேர்ந்தெடுத்தார். மனதில் உள்ள மலங்களை தமது திருக்கைவிரல் நகங்களின் ஒப்பற்ற ஒளியால் ஒதுக்கித் தள்ளி, வ்யாக்யான முத்ரையுடன் கூடிய தமது திருக்கரத்தால் ஜ்ஞாநமயமான பகவானின் சித்ரத்தை சிரத்தையுடன் என் மனதில் எழுதியருளினார் என்று ஸ்வாமி அங்கு ஸ்ரீபாஷ்யகாரரின் திருக்கைத்தலத்தை தரிசித்து அநுஸந்தாநம் பண்ணும்படியாய் இருந்தது.

இதை எல்லாம் முன்பே நன்கு விமர்சித்த வித்வான்களுக்கு, கோபாலவிம்சதியில் 'लिखितः केन ममैष शिल्पिना' என்று கேட்ட கேள்வி, இங்கு பதிலளிக்கப்பட்டு பூர்த்தியடைந்தது என்ற விஷயம் விசதமேயாம். ஆயினும் இந்நன்னாளில் ஸ்ரீஸ்வாமி தேசிகனின் திருவடி த்யானம் ஒருவாறு பெற ஒரு ஆளுகவுபயோகித்து இவ்வியாஸத்தை எழுதினேன்.

ஸ்ரீ:

கண்ணனுக்கே யாமது காமம்

[ஸ்ரீ. உப, கோடியாலம், K. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]

கலயே ஸததம் கருணாஜலதிம் கருணாவிஷயம் கமலாதிபதே: ।
கலிவைரிசடாரிவசோரஸிகம் கவிதார்க்கிககேஸரிஸூரிகுரும் ॥

கண்ணனுக்கேயாமது காமம், என்னுரைத்தான், வாமனன், சீலன், இராமாநுஜன்"— இவ்வர்த்தம் சுருதியி னிறுதியினிதயச் சுடர், வேதஸாரதமச் சுவையினிப்பு. இதைத் தொண்டருக்குச் சொல்லமுதாயளித்த புநிதன், யதிராஜனையன்றி 'தேவு மற்றறியேனென்றவரும், அவ்வெதிபதியின் துயரறுசுடரடியின் கல்யாணகுணக்கோவையென 'இராமாநுஜ நூற்றந்தாதியை அருளிச்செய்தவருமான அரங்கத்தமுதன். இவ்வருள்கொண்டாடுமடியவர், துழாய்முடி ஆதியஞ்சோதி குணங்களை யாயிரமாகப் பாடிய ஸ்ரீசடகோபனுக்கே அந்தரங்கவடிமை செய்து, அவன் கழலிணையைப் பாவினின்னிசை பாடித் திரிந்து, கரிய கோலத் திருவுருவைக் கண்டு களித்த, துன்பற்ற மதுரகவிமன்னன் தோன்றக்காட்டிய, தொல்வழியே நல்வழியெனத் துணிந்து பின்பற்றியவர். ஆசார்யரத்நமாகிய நம் தேசிகனார் பதுமக்கழலுக்கு அந்தாதி யிருபது மாய்ந்துரைத்த சீராகிய வரதாரியனுக்கு முன்னே வழிகாட்டியாய், சிஷ்யரத்நபங்க்தியில் நடுநாயகமாய் விளங்கியவர். யதிபதியின் அநுக்ரஹத்தால் தண்மை கழிந்து தத்துவங் கண்ட இப் பெருந்தகை, ஆரணநூல்வழிச் செவ்வையை யடியார்க்கன்புடன் புகட்டிய யதிவாரிதியின் திருவடிகளே தஞ்சமென்று திடமாகப்பற்றி, அப் பெரும்பூதூர் வந்த வள்ளலின் திவ்யமங்களவிக்ரஹத்தை நெஞ்சம்பால் நிறுத்தி, அவரது கல்யாணகுணங்களையே பலர் அறியப் பரவி, ஆசார்யபக்தியுடன், பிறவாமை பெற்று நித்யஸூரிகளோடு சேர்ந்தவர்.

2. நிரதிசயஸுகரூபமாய், 'தம்மையே ஒக்க வருள்செய்வர்' என்றபடி, ஆச்ரிதரைத் தன்னைப்போல் ஆநந்திப்பிக்கும், 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' யான வாஸுதேவனோடு நமக்கிருக்குமநந்யார்ஹசேஷசேஷிபாவஸம்பந்தத்தால், ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா வடிமையாகும் பகவத் கைங்கர்யமே சிறந்த புருஷார்த்தமென்று ஏகசித்தமுடன் பரமபக்திதசையிலிருக்கும் சேதனன், 'எனக்கு தர்மார்த்தமோக்ஷங்கள் வேண்டா, பகவத் காமமே வேண்டு'மென்றிருப்பது, உபாதேயதமமான பரமார்த்தமென்று பூர்வாசார்யர்கள் நிஷ்கர்ஷித்தார்கள். எம்பெருமானின் பரத்வ ஸௌலப்ய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களிலே ஈடுபட்டு, அவ்வநுபவஜநிதமாய்; அவனை ஸம்ச்லேஷித்தாலல்லது தரிக்கவொண்ணாது என்றும், தான் மடலெடுத்தாகிலும் ஸித்தோபாயனான அச்யுதனையே அடைவேனென்றும், சேதநன் மனோதிடத்துடன் 'கண்ணனுக்கே யாமது காமம்' 'மற்றை நங்காமங்கள் மாற்று' என்றிறைஞ்சும் ஸாரஸ்வாதத்தை ஆழ்வார்களுமருளிச்செய்தார்கள். இம் மடலெடுக்கை அத்யந்த பகவத்ப்ரீதிவிசேஷமாய் சிஷ்டாசாரஸித்தமாயிருக்குமென்று திருமங்கைமன்னன் தன்னிரு திருமடல்களிலும் உணர்த்தியிருக்கிறார். உபயவிபூதிநாதனை யநுபவிப்பதில் தனக்குண்டான அபிநிவேசத்தால் சொல்லுகிற பாசுரங்களை, தாமான தன்மையை மறந்து நாயிகாவார்த்தையாகப் பேசுவது நம் ஆத்மஸ்வரூபத்தின் நியதமான நிஷ்டைதானே. தவிர புருஷஸூக்தத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸர்வாத்மகனான மஹாபுருஷனைப்பற்றிப்பேசுங்கால், இதரபுருஷர்கள் ஸ்த்ரீபாவத்தையடைந்தவர்களே. அவ்விதமடைவதும் ஸ்வரூபலக்ஷணமாகவமையும்.

3. புருஷோத்தமனும் ஸர்வாங்கஸுந்தரனுமான பகவானிடம் காமம் கொள்வது நம் சேஷவ்ருத்தியின் நிர்தோஷகரமான இயல்பு. த்ரௌபதியின் அழகைப் பார்த்து அந்தப்புரஸ்த்ரீகள், நாம் புருஷர்களாயிருந்து அவளையநுபவிக்கக்கொடுத்துவைக்கவில்லையேயென்று ஏக்கமுற்றார்களாம். ஜ்ஞாநவைராக்யநிதிகளான ரிஷிகளும் யோகிகளும், கண்ணனை

ஸேவித்து, அவனழகிலீடுபட்டு மனதில் ஸ்த்ரீ பாவத்தை யடைந்தார்களாம். கோபிமார்களும் கோவிந்தனைக் காதலித்து அவனிடத்திலந்தரங்க கைங்கர்யங்களைச் செய்ய, தங்களை யங்கீகரிக்கும்படி அப்பரஞ்ஜோதியை ப்ரார்த்தித்தார்களாம். இவ்விதமே 'குணஜ்ஞா:' என்ற ஆழ்வார்களும், 'குணஸிந்தௌ க்ருத ஸம்ப்லவத்விதீயை:' என்றபடி பகவத்குணநுபவமாகிற ஸாகரத்திலாழ்ந்தவர்களாய், எம்பெருமானுக்கு நாயகியாய் உடப்பட்டிருக்க ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய பக்தி அத்யந்தவநுராகத்தினுல் ச்ருங்காரரஸமாகப் பரிணமித்து மனத்தாலே பகவானைக் காமிக்கும்படி செய்தது. 'ஸம்பத்ய ப்ரஹ்ம புங்க்தே' (அதிகரணஸாராவளி) என்றவிதம் இகத்திலும் பரத்திலும் ஸர்வாதிபதியான பரப்ரஹ்மம் ரஸிப்பது சேதனனின் சேஷத்வரஸத்திலல்லவா? பூமகள் எல்லையற்ற காதலோடு அணையும் காளமேகம் ஜீவராசிகளை ப்ரேமையுடன் பரிஷ்வங்கம் செய்து அளவற்றவின்பத்தைக் கொடுத்து தானுமவ்வின்பத்தை யடைகிருனென்று ச்ருதிகள் கோஷிக்கவில்லையா?

4, ஆழ்வார்களுக்கெல்லா மவயவியான ஸ்ரீ ஸடகோபனும் பகவானிடம் அந்தரங்க சேஷவ்ருத்தியான காமத்தை யநுபவித்தார். போதமரும் திருமாதுடன் பொருளென்று நின்ற புராணனுக்குத் திருவுரையாயும், 'ச்ருதீநாம் விச்ரமாயாலம்' என்றபடி, வேதங்களுக்கெல்லாம் இளைப்பாறும் ஸ்தாநமாயுமமைந்த நம்மாழ்வாரின் பகவதநுபவஜநிதமான ஆயிரம் இன்தமிழ்ப் பாசுரங்களும் எம்பெருமானின் பரத்வ ஸௌலப்யாதிகளைப் பரக்கப் பேசி நின்றன. 'மயர்வற மதிநலம்' பெற்ற இம் மாறன், தன் திருவாய்மொழிகளில் பகவானை நாயகனுகவும் தன்னை நாயகியாகவும் பாவித்து, அவனோடு சேர்ந்த இன்பம், அவனை விட்டுப் பிரிந்த சோகம், தன் ஸ்வபாவம் இவைகளைப் பற்றிப் பேசி, அவனிடத்தில் காமத்தை யடைகிருர். அவர் எம்பெருமானுக்குச் சேஷமாயும், அவனைத் தவிர வேறு போக்யவஸ்து இல்லாதவராயும், அவனை ஒரு க்ஷணமும் பிரிந்திருக்க முடியாதவராயுமிருந்ததே இதற்குக் காரணம். மேலும், அவனுடைய அவயவஸமுதாய அழகைப் பார்த்துப் பரவசராய், தானொரு ஸ்த்ரீயாயிருந்து அவன் குணங்களை யநுபவிக்கவேண்டுமென்ற தீவ்ர விஷயங்கராகமுடையவராயிருந்தார்.

5. ஆழ்வார் எம்பெருமானை யநுபவிக்கும் போது உண்டான இன்பத்தை 'தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திப்ப' என்று அருளிச்செய்கிருர். அவன் பிரிவால் ஸ்த்ரீயைப்போலப் பல அவஸ்தைகளை யடைகிருர். அவனை ஸம்ச்லேஷிப்பது முடியாதென்று நினைத்தபோது நிர்வேதமடைந்து பகவானுல் அலக்ஷியம் செய்யப்பட்ட உடம்பும், அதைச் சேர்ந்தவைகளும் வேண்டாமென்று அலற்றுகிருர்– 'மாருளன் கவராத மணிமாமைக் குறைவிலமே' 'உடம்பினுல் குறைவிலமே' 'அறிவினுல் குறைவிலமே' 'மேகலையால்குறைவிலமே' என்று பேசுகிருர். 'ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம்' (ஸ்தோத்ரரத்நம்) என்று அவன் திருவடிகளில் சேஷத்வ ஸாம்ராஜ்யத்திற்குப் புறம்பானவை யாவும் வேண்டாமென்று பணித்தருளுகிருர். தானே நாயகியாய் மடலூர்வதைப் பேசுங்கால், பகவத்ஸம்ச்லேஷவின்ப மடைந்ததையும், அவனைப் பிரிந்து படுகிற வருத்தத்தையும், அவனை விடமுடியாத தன் மனோரதத்தையும், எவ்வளவு காலமானுலும் அவனையே யடைவேன் என்ற மனவுறுதியையும், அதற்காக ('ஸ்கலித நிகிலஸங்கா' என்றபடி) மற்ற விஷயங்களில் பற்றுதல் எல்லாவற்றையும் விட்டுவிட்டதையும் சொல்லுகிருர். அச்யுதனின் துளஸி தன் திருமேனியில் வாஸிக்கும்படியும், தன் வகுளபுஷ்பம் அவன் திருமேனியில் வாஸிக்கும்படியாகவும் ஸம்ச்லேஷித்து ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வமென்று தன்ப்ரபந்தங்களில் காட்டியருளினர். ஸர்வோபநிஷத்ஸாரமான இவர் பாமாலையை பகவான் தன் மார்பிலும் சிரஸ்ஸிலும் அணிந்துகொண்டதால், அச்செய்ய தமிழ்மாலை 'வகுளாமோதவாஸித' மாயிற்று,

6: ஸ்ரீ சடகோபனைப் போலவே மற்ற ஆழ்வார்களும், பகவானைக் காமுற்று நாயகிபாவத்தையடைந்து குணநுபவம் செய்திருக்கிருர்கள். ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்கள் பிறவிநோய்க்கு மருந்தாய் சுத்தாஸ்வாதமாயிருப்பவை. 'ச்ரோத்ரதிவ்யௌஷதம்' என்றபடி மறுபிறவியறுத்து வானில் வைக்கும். இந்த மாத்ருகைச்சுளகங்களைக் காதாலேயே உட்கொள்ளலாம். இவைகளை யநுஸந்திப்பவர் பகவத்காமமடைந்து எழிற்பதமெய்துவர். 'மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே'

'குழலின் தோளைவாய் நீர்கொண்டு குளிர முகத்துத் தடவீரே' என்று சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும்,

'என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று திருப்பாணனும்,

'கண்ணன் மனத்துள்ளே நிற்கவும்கைவளைகள்
என்னோ கழன்ற இவையென்ன மாயங்கள்,
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க,
என் மனமும் கண்ணுமோடி, எம்பெருமான்
திருவடிக்கீழணைய,
இப்பால், கைவளையும் மேகலையும் காணேன்.
கண்டேன் கனமகரக்குழையிரண்டும், நான்கு
தோளும்' என்று கலியனும்,

'கண்ணபிரானுக்கு என் தையலிழந்தது தன்
னுடைச்சாயே'
'கோடியவுலகத்தீர்க்கிவையென் சொல்லுகேன்
கோடியேன் கோடி யென்மகள் கோலங்களே',
என்று நம்மாழ்வாரும்,

'காறைபூணும், கண்ணாடிகாணும், தன் கை
யில் வளைகுலுக்கும்
கூறையுடுக்குமயர்க்கும் தன் கோவ்வைச் சேவ்
வாய் திருத்தும்' என்று பெரியாழ்வாரும்,

'அற்புதன் அநந்தசயனனாதிபூதன் மாதவன்
நிற்பதுமிருப்பதும் கிடப்பதும் மென்னெஞ்சுளே'
என்று பக்திஸாரரும் மதுஸூதனனைக் காதலித்துப் போந்தார்கள்.

7. 'கண்ணனுக்கேயாமது காமம்' என்ற விஷயத்தில், ஆழ்வார்களுக்குள்ள படிகளெல்லாம் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுக்கும் உண்டென்று ஸ்வாமியின் தேன்மொழிகளான 'ஸ்ரீ அச்யுதசதகம், மும்மணிக்கோவை' களில் காண்கிறோம். இக் குருமாமணி, லக்ஷ்மீநாதன் தொடங்கி வாதிஹம்ஸாம்புவாஹர் வரையிலாக ஜ்ஞானபரம்பரையிலுள்ள ஆழ்வாராசார்யர்களின் விசேஷகடாக்ஷத்தைப் பெற்றவராய், அருமறை குருவாய் அறவுருநிலையாய், மயர்வறமதிநலத்துடன், பரிமுகப்பரமனின் லாலாஸுதாபானலப்த ஸர்வஜ்ஞராய் இருப்பர். இவர் பிறந்தது நமக்கெல்லாம் பிறவாமை தந்திட. எம்பெருமானுக்கிவர் பல்லாண்டு பாடியது தம்மடியார்களின் பந்தனை தீர. இவர் அவதாரவிசேஷத்தையறிந்த பூர்வர்கள், இவர் ஸ்ரீ க்ருஷ்ணனையும் மஹரிஷிகளையும் ஆழ்வார்களையும் போன்றவரென்றும், வேங்கடமாமலை மேவிய மதுவிஜயினனே திருவேங்கடநாததேசிகனாய் வந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தானென்றும் அருளிச்செய்தார்கள். பால்யத்திலிருந்தே தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு, ஆழ்வாரைப்போல பகவத்ஸம்ச்லேஷவியோகைகஸுகதுக்கராய் எழுந்தருளியிருந்தார். கமலாஸஹாயனிடத்தில் இவர் பரமபக்தியோடு பிராட்டிமார்தசையையடைந்து ஸர்வத்தையும் மறந்து, பகவத்குணாநுஸந்தானத்தையே காமமாயநுபவித்தார்.

8. ஜ்ஞானவைராக்ய செழுமணியான தூப்புல் துரந்தரன், ஸ்ரீ தேவநாதனின்,

'அகுமாரயௌவநஸ்திதம்
அஹீந்த்ரபுரநாதாபிமதமநுரூபம் ।
நித்யம் ஸ்வபாவஸித்தம்
ச்ரூயதே ஸௌரிமஹிதம் சுபம் தவ ரூபம் ॥
(ஸ்ரீ அச்யுதசதகம்)

என்ற, திவ்ய வடிவழகை ஸமுதாயமாகவும், தனித்தனியாகவும் அநுபவித்து, அவ்வநுபவஜநிதமான நிரவதிகப்ரீதியாலே, தாமான தன்மையைப் பெரும்பாலும்மறந்து நாயிகாபாவத்தோடு அவஸந்நராய்க்கிடந்து துடித்து, ஸ்த்ரீகளுக்கஸாதாரணமான ப்ராக்ருதபாஷையில், 'ஸ்ரீ அச்யுதசதக' த்தில் ஆசார்யமுகமாய்ச் சரணமடைந்து, பெருமாளின் பரத்வ ஸௌலப்யாதிகளைப் பரக்கப் பேசினார். ஆதிகவிகளை விட உத்க்ருஷ்டமான கவித்வத்தையுடைய நம் கவிகேஸரியின் மறைமுதுமொழிஸாரமான ச்லோகங்களிலும், காதைகளிலுமுள்ள ரஸபாவாலங்காரலக்ஷணங்களை வர்ணிக்க முடியாது. ஸ்ரீ அச்யுதசதகத்தில்,

ஜ்நானஸ்ய கோऽவிஷய: அச்யுத!
கருணையாஸ்தவ கோ தூரஸ்தித: ।
சக்த்யா: கோऽதிபர: தஸ்மாத்
கலுபாயஸ் த்வமேவ ஸ்வயம்ஸித்த: ॥

உபநிஷச்சிர:குஸுமம்
உத்தம்ஸயித்வா தவ பதாம்புஜயுகளம் ।

தயிதோ பவிஷ்யாமி கதா [க்ஷ: ॥
தாஸோ தாஸாநாம் ஸத்ய! ஸகிரிஸத்ரு என்றும் நம் ஸ்வாமி யருளிச்செய்திருக்கும் தெவிட்டாத தெள்ளமுதக் காமகக்கன்னல் களின் சுவையை யநுபவித்துப் பாருங்கள்.

9. பகவத்குணநுஸந்தானத்தினுல் ஸ்ரீதேசி கனின் பக்தி, தீவ்ரச்ருங்காரரஸமாகப் பரிண மித்துக் கண்ணனை யவர் காதலித்து 'மும் மணிக்கோவை'யை அவனிடம் ஸமர்ப்பித் தார். இவ்வழகான குணக்கழற்காமக்கோவை யில் பிராட்டியைப் புருஷகாரமாய்க்கொண்டு எம்பெருமானையணுகி, அவனுடைய அநுக்ர ஹத்தால் அவனை உள்ளபடியே ஸாக்ஷாத் கரித்து, அவன் வடிவழகை நிரந்தரமாக அநு பவிக்கவேண்டுமென்கிற அபிநிவேசாதிசயத்தி னுல், தம்முடைய தசையைத் தெரிவித்து, பரபக்திபரஜ்ஞானபரமபக்திக்ரமங்களை யடைந்து, தம் மனோரதப்படி அவனை யநுப விக்கப் பெருமையினுல், அந்தப் பரபக்திமுத லியவை ச்ருங்காரரஸமாக மாறி மேல்மேலென வ்ருத்தியடைந்த ப்ரகாரங்களை நிரூபித்தார். பிறகு பகவானின் ஸ்வரூபகுணவிபவைச்வர் யாதிகளைத் தாமநுபவித்தபடியைப் பேசி, தான் ஸாக்ஷாத்கரித்த திவ்யமங்களவிக்ரஹத் தைக் காமத்தோடு துதித்தார். ஸ்ரீ தேவ நாதனும் இவரோடு ஸம்ச்லேஷிக்க மிகவும் ஆவல் கொண்டவனுய் தன்படிகளெல்லாவற் றையுமிவருக்கு ப்ரகாசிப்பிக்க, நம்மண்ணலும்:-

நந்துதலில்லா நல்விளக்காகி
அந்தமில்லமுத வாழியாய் நிற்றி
உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை,
கொண்டிட எம்மை யடைக்கலமுலகில்
கண்டிலங்கதி யுனையன்றி மற்றென்றும்

என்று மடலெடுத்து, 'வைகலும் வெண்ணை கலந்துண்டான், பொய் கலவாது மெய் கலந் தது' அடியேன் திறத்திலன்றோ! என்றவாறு ச்ரியப்பதியின் ஶரண்யத்வோபயுக்தங்களான கல்யாணகுணங்களிலீடுபட்டார். கடைசியில் பகவானின் ஜகத்காரணத்வ ஸர்வோபகாரத்வ ஸர்வவிதபந்துத்வாதிகளையும் அநுபவித்தார். ஆழ்வார்களின் அருள்மொழிகளில் காணப் படும் ரஸங்களில் விஞ்சியிருக்கும்,

ஆர்க்குங் கருணைபொழிவா னயிந்தையில் வந்தமர்ந்த
கார்க்கொண்டலைக் கண்ட காதற்புனமயிற் கண்பனியா
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர் விதிர்க்கும் வேள்கி வெவ்வுயிர்க்கும்
பார்க்கின்றவர்க் கிது நாமேன்கோலென்று பயிலுவமே

என்ற, இவர் கட்டளைக்கலித்துறையைக் கற்று ஆனந்திப்போமாக.

10. அந்தமிலா மறையன்ப ரடியார்க்கு மடியேன்,
அதின் கருத்தை யாய்ந்தளித்த ஆழ்வார்க்கு மடியேன்,
செந்தமிழா மருட்செயலி னடியார்க்கு மடியேன்,
சிந்தனைசெய் தொண்டர்களி னடியார்க்கு மடியேன்,
எந்தையிடம் சரணநெறி புகுந்தார்க்கு மடியேன்,
தருமநெறி யிழிந்தாரி னடியார்க்கு மடியேன்,
சந்தமிகு தமிழ்மறையோன் தேசிகனுர்க் கடியேன்,
அவர்பாதம் பணிந்தவரி னடியார்க்கு மடியேன்.

ஸ்ரீ:

"அமலனாதிபிரானும் அந்தர்ஜ்யோதிஸ்ஸும்"

ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்.
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

உலகத்தின் க்ஷேமத்தையே சிந்திக்கும்கருணாநிதியான திருவேங்கடமுடையானின் அவதாரமாய் ப்ரக்யாதிபெற்றநம்தூப்புல்வள்ளலான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன், இயற்றிய 'பகவத்யாநஸோபாநம்' என்ற ஸ்தோத்ரத்தின் பெருமையை சற்றுஅநுபவிப்போம். இந்த ஸ்தோத்ரம் திருப்பாணாழ்வார் அருளிச் செய்த 'அமலனாதிபிரான்' என்கிற ப்ரபந்தத்தை அநுஸரித்தது. ஸ்வாமி தேசிகனுக்கு, அபிநவ தசாவதாரபூதர்களான ஆழ்வார்கள் எல்லோர் விஷயத்திலும் பஹுமானம் இருந்தபோதிலும் திருப்பாணாழ்வார் விஷயத்தில் விசேஷமான ஓர் மதிப்பும் அபிமானமும் உண்டு. ஆகையினால்தான் 'நம்பாணநாதன்' என்று இவ்வாழ்வாரைக் குறிப்பிடுகிறார். இவ்வாழ்வாருக்கும் தமக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய விசேஷாநுக்ரஹத்தினால் 'முனிவாஹனர்' என்றும் 'வேதாந்தாசார்யர்' என்றும் அடைவே பிருதுகள் வழங்கப்பட்டதையொட்டி தம்முடைய ஸம்பந்தத்தை இட்டு இவரைக் குறிக்கிறார். இதனால் இவருடைய அபிமான விசேஷம் வ்யக்தமாகின்றது. மற்ற ஆழ்வார்கள் போலன்றி பகவத்விஷயமாய் இவ்வாழ்வார் பத்தே பாட்டுக்கள் அருளிச்செய்த போதிலும் இப்ப்ரபந்தத்தில் விசேஷ மதிப்பை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் வைத்திருக்கிறார். அதை அமலனாதிபிரானின் வ்யாக்யனமாய்த் தாமருளிச்செய்த முனிவாஹநபோகத்தில், மற்ற ப்ரபந்தங்களைக் காட்டிலும் இப்ப்ரபந்தத்துக்குள்ள வாசியையநுபவிக்கும்பொழுது 'இப்ப்ரபந்தம் அநுபவகநரஸமாயிருக்கிறது' என்று வெளியிடுகிறார். திருப்பாணாழ்வார் ஸ்ரீரங்கநாதனைத் திருவடிமுதல் திருமுடிவரை ஸேவித்து தாம் அநுபவித்ததை 'அமலனாதிபிரான்' என்று துடங்கி பத்து பாட்டால் வெகு அழகாகப் பேசுகிறார். ஸ்வாமி தேசிகனும் அதே க்ரமத்தை அநுஸரித்து பத்து ச்லோகங்களால் ஸ்ரீரங்கநாதனின் திருமேனியழகில் ஈடுபட்டு ஸ்தோத்ரம் செய்கிறார் அமலனாதிபிரானில் முதல் மூன்று பாட்டுகள் ப்ரணவத்தின் மூன்றெழுத்துக்களையும் தலையாகக் கொண்டிருக்கிறது. 'அமலன்' என்று ப்ரணவத்தின் முதல் எழுத்தில் ஆரம்பத்தை அநுஸரித்து 'அந்த:' ([illegible]) என்று இந்த ஸ்தோத்ரமும் அகாரத்திலேயே ஆரம்பிக்கிறது.

'அமலனாதிபிரான்' என்கிற முதற்பாட்டில் ஆழ்வார்; 'நீள்மதிலரங்கத்தம்மான் திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளனவொக்கின்றதே' என்று திருக்கல்யாணகுணங்களுடன் கூடினவராய் ஸ்ரீரங்கத்தில் கண் வளர்ந்தருளுகிற எம்பெருமானின் தாமரைபோன்ற திருவடிகள் தன் கண்களுக்கு விஷயமானதைப் பேசுகிறார். 'எந்த திருவடிகள் ஸநகாதியோகிகளுடைய திவ்ய சக்ஷுஸ்களுக்கும் தூரமாயிருக்கின்றனவோ அவைகளே என் மாம்ஸ சக்ஷுஸ்களுக்கும் மிகவும் ஸமீபத்திலிருக்கின்றனவே' என்னே எம்பெருமானின் கருணை! என்றுச்சர்யத்துடன்ஸாதிக்கிறார். இதை 'யமிநாம் கிமப்யந்தர்ஜ்யோதி: த்ருச்யதே ரங்கமத்யே' ([illegible]) என்று தேசிகன் வெளியிடுகிறார். இந்தப் பாட்டில் உள்ள 'நீள்மதிளரங்கத்தம்மான்' என்கிற வரை தனியாக முதல் ச்லோகத்தால் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவித்து இரண்டாவது ச்லோகத்தால் திருவடிகளையநுபவிக்கிறார். முதல் ச்லோகத்தில் பகவானுடைய பரத்வஸௌலப்யகுணங்களை விசேஷித்தநுஸந்திக்கிறார். 2-வது ச்லோகத்தில் திரு

வடிகளையநுபவிக்கும்போது 'ப்ரஹ்மாதிகளுடைய முடிகளால் தரிக்கப்படக்கூடியதாயும், மஹாலக்ஷ்மி, பூமிப்பிராட்டி இவர்களால் தன் தாமரை போன்ற கரங்களால் மெதுவாக வருடப்பட்டதாகவும்' (வெயஸாං ஊஷிவெஸ்ஂ ஶக்ஷீஹ பூஜெ்யாஃ கூரஸாஸலெஜஶ-ூரஷிதம்) என்னும் அடைமொழிகளால் 'திருக்கமலபாதம்' என்பதனல் ஸூசிப்பிக்கப்பட்ட பாவநத்வம், போக்யத்வம், மார்த்தவம், முதலிய குணவிசேஷங்களுடன் அநுபவிக்கிறுர்.

2-வது பாட்டில் ஆழ்வார் திருப்பீதாம்பரத்தில் ஈடுபட்டார். ஸ்வாமி தேசிகன் திருவடிகளின் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு அநுபவித்துக் கொண்டிருக்கும்போது, பெரிய பெருமாள் தன் கணுக் காலைக் காட்டியருள, அதன் ஸௌந்தர்யாதிசயத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு அதை மூன்ருவது ச்லோகத்தால் அநுபவிக்கிறுர். முழங்கால் காந்திகளும் சேர்ந்து இரண்டு மடங்கு எழிலையுடைத்தானதாய் தண்டைகளின் காந்திகளால் விசித்ர ஸந்நிவேசத்தையுடையதாய், ஆச்ரிதர்களான பாண்டவர்களுடைய க்லேசத்தைப் போக்க மிகவும் த்வரையுள்ளவைகளாயுள்ள கணுக்கால்களை ஸேவித்தால் இனி என் ஆத்மா ஜந்மங் களைக் கடந்ததென்கிறுர். திருவரையில் சாற்றின பீதாம்பரத்தை அநுபவிக்கும் ஆழ்வாருக்கு, கணுக்கால் திருத்துடைகள் இவைகளின் அநுபவமும் அதில் அந்தர்பூதமானதால் அவைகளைத் தனியாக ஸ்ரீ தேசிகன் அநுபவித்ததாகத் தோன்றுகிறது.

அடுத்த 4-வது ச்லோகத்தில் திருத்துடைகளையநுபவிக்கிறுர். 'உவந்த உள்ளத்தனய்' என்கிற 2-வது பாட்டில், 'கடியார் பொழில் அரங்கத்தம்மான் அரைச் சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என் சிந்தனையே' என்று ஸ்ரீரங்கநாதனுடைய திருவரையில் சாற்றிய சிவந்த பட்டாடையில் என் சித்தம் திருவடியைப் பற்றினவென்னுலும் மீட்கவொண்ணுதபடி துவக்குண்டது' என்று ஆச்சர்யப்படும் ஆழ்வார் பீதாம்பரத்தை ப்ரதானமாக அநுபவித்தார். ஸ்வாமி தேசிகன் பீதாம்பரத்தைச் சொன்னதை அதால் சூழப்பட்ட திருத்துடைகளுக்கு உபலக்ஷணமாகக்கொண்டு 'கௌக்ஷௌமாச்லிஷ்டம்... ... ... ஊருயுக்மம் மாமிகா மதிர்நிர்விசதி' (க்ஷௌமாஶ்லிஷ்டം ஊரூயுக்மம் மாமிகா மதிர்நிர்விஶதி) [திருப்பீதாம்பரத்தால் சூழப்பட்ட திருத்துடைகள். லாவண்ய வெள்ளத்தின் இரு பெருக்கோ; என்று என் சிந்தை அநுபவிக்கிறது'] என்று ஸாதித்தார்.

'மந்திபாய் வடவேங்கடமாமலை' என்கிற 3-வது பாட்டில் 'அரங்கத்தரவணையான் அந்திபோல் நிறத்தாடையும், அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் உந்திமேலதன்றே அடியேனுள்ளத்தின்னுயிரே' என்று பெரிய பெருமாளுடைய செவ்வானம் போன்ற நிறத்தையுடைய பீதாம்பரத்தை அநுபவித்து அதன்மேல் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்ததாய் ஒப்பற்ற அழகையுடையதாயுமிருக்கிற திருநாபிகமலத்திலல்லவா என் ஆத்மஸ்வரூபமிருக்கின்றது' என்ருர் ஆழ்வார். ஸ்ரீதேசிகனும் 'நாளீகேந ஸ்புரிதரஜஸா வேதஸோ நிர்மிமாணா' ... ... ரங்கநாதஸ்ய நாபி:' (நாஷீகெந ஸ்ஃபுரிதரஜஸா வெயஸொ நிமிஹாணா ... ... ரஜநாயஸ்ய நாஹிஃ [ப்ரளயகாலத்தில் நெருக்கமில்லாமல் உலகங்களை உள்ளே வைத்துப்பாதுகாத்துஸ்ருஷ்டிகாலத்தில் தன் கமலத்தின் மூலமாய் அநேகம் ப்ரஹ்மாக்களை ஸ்ருஷ்டித்த திருநாபி என் மனத்தைக் கவர்கின்றது'] என்று ஸாதிக்கிறுர். 'அயனைப் படைத்தது' என்று ஸ்ருஷ்டியில் திருநாபிக்கு ஸம்பந்தத்தைச் சொன்னது அதற்கு முன்னதான ப்ரளயத்திற்கும் உபலக்ஷணம் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம்.

'சதுரமாமதிள் சூழ்' என்கிற 4-வது பாட்டில் 'அரங்கத்தம்மான் திருவயிற்றுதரபந்தம் என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே' ['உதரபந்தம்' என்கிற திருவயிற்றில் சாற்றியிருக்கும் திருவாபரணம் தம்முடைய சிறிய உள்ளத்திலே வெளியில் போல் உலாவுகின்றது'] என்று ஆழ்வார் வியப்படைகிறுர்.

இதை ஸ்வாமி தேசிகன், திருத்துடைகளை யநுபவிக்கும்போது அதே ச்லோகத்தில் பீதாம்பரத்தை த்யாகித்தவுடன், காஞ்சீயுடன் (ஒட்டியாணம்) இந்த உதரபந்தத்தின் காந்தியும் கீழ் திருத்துடைகளில் வ்யாபித்த படியால் இவைகளையும் சேர்த்து '𑌨𑍍𑌯𑌞𑍍𑌚𑌤𑍍𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌕𑌿𑌰𑌣𑌰𑍁𑌚𑌿𑌰𑌂' (ந்யஞ்சத்காஞ்சீ கிரணருசிரம்) என்று அநுபவித்தார். காஞ்சியைச் சொன்னது உதரஸம்பந்தம் பெற்ற உதரபந்தத்திற்கும் உபலக்ஷணம்.

'பாரமாயபழவினை' என்கிற 5-வது பாட்டில் 'அரங்கத்தம்மான் திருமார்பதன்றோ அடியேனை யாட்கொண்டதே' என்று பிராட்டியையும் ஹாரத்தையுமுடைய திருவரங்கநகரப்பன் திருமார்பு அடியேனை தன்னிடத்தில் ஈடுபடுத்திக்கொண்டது' என்று ஆழ்வார் ஸாதித்த அர்த்தத்தை ஸ்ரீ தேசிகனும் (ஸ்ரீ𑌪𑌦𑌨𑍍𑌯𑌾𑌸𑌧𑌨𑍍𑌯𑌂, 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌕𑍋𑌦𑌾𑌰𑌹𑌾𑌰𑌂) ஸ்ரீபதந்யாஸதந்யம், சந்த்ரிகோதாரஹாரம்' என்று பெரிய பிராட்டியாரின் திருவடி வைப்பதனால் தந்யமாய், நிலா போன்ற வெண்மையான நீண்ட ஹாரத்தையுடையதாயுமிருக்கிற திருமார்பு' என்று அநுஸந்தித்து இதை உபலக்ஷணமாய்க்கொண்டு ஸர்வேச்வரத்வஸூசகமான திருமருவும், கௌஸ்துபமணியும், எப்பொழுதும் செவ்விமாறாத துளஸிகள் நிறைந்த வைஜயந்தி என்கிற வநமாலையும் சேர்ந்த திருமார்பு என் ஸந்தாபத்தைப் போக்குகிறது' என்று இனியராகிறார்.

'துண்டவெண்பிறையன்' என்கிற 6-வது பாட்டில் 'அரங்கநகர் மேயவப்பன் அண்டரண்டபகிரண்டத்தொருமாநிலம் எழுமால்வரை முற்றும் உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே' ப்ரஹ்மாண்டத்திற்குள்ளே வஸிக்கும் ஸகல சேதநர்களையும் எல்லா அண்டங்களையும், அண்டங்களுக்கு வெளிப்பட்ட அண்டாவரணங்களையும் விசாலமான பூமியையும், எழுகுல பர்வதங்களையும் ஒன்றும் விடாதபடி விழுங்கின திருக்கழுத்தன்றோ அடியேனைஉய்யக்கொண்டது' என்று கண்டத்தை ஆழ்வார் அநுபவித்தார், ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகனோவெனில் 'கம்பீரத் வாத் க்வசந ஸமயே கூடநிக்ஷிப்தவிச்வா' (𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌨 𑌸𑌮𑌯𑍇 𑌗𑍂𑌢𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌵𑌿𑌶𑍍𑌵𑌾) என்று ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சங்களை வைத்தது' என்பதனால் விழுங்கினதும் அர்த்தஸித்தமாகக்கருதி அதனால் திருக்கழுத்தும்அநுபவிக்கப்பட்டதாகவேதிருவுள்ளத்தில் கொண்டு கண்டத்தைத் தனியாக அநுபவிக்கவில்லை. இவ்வர்த்தம் 'ஸர்வகார்யங்களையும் எல்லாம் திருவயிற்றில் வைத்து ரக்ஷிக்கைக்காக விழுங்கின திருக்கழுத்து' என்கிற இப்பாட்டின் வ்யாக்யாந முநிவாஹநபோக ஸ்ரீஸூக்தியால் ஸூசிப்பிக்கப்பட்டது.

'கையனார் சுரிசங்கு' என்கிற 7-வது பாட்டில் ஆழ்வார், சங்கு சக்கரங்களையேந்தி திருக்கைகளையநுபவித்து உடனே திருத்துழாயின் வாஸனை கமழ்ந்த திருமுடியின் மேல் சென்ற என் சிந்தையை ஸ்ரீரங்கநாதனுடைய சிவந்த வாய் பறித்துக்கொண்டதே' என்று விஸ்மயிக்கிறார். ஸ்ரீ தேசிகன், பெரிய பெருமாள் என்று வ்யவஹரிக்கப்படும் மூலவரின் திருக்கைகள் சங்கசக்கரங்களை ஏந்தவில்லையாகையால் இதை ரேகாரூபமாய் மூலவர் விஷயத்தில் யோஜித்து உத்ஸவர் விஷயமாய் சங்கசக்கரங்களைத் தரிக்கிற திருக்கைகளை அநுபவித்ததாய் யோஜநாந்தரமும் முநிவாஹநபோகத்தில் அருளிச்செய்து மூலவிக்ரஹத்தை அநுபவிக்கப் புகுந்த தாம் இவ்விடத்தில் 'ஏகம் லீலோபஹிதம்' (𑌏𑌕𑌂 𑌲𑍀𑌲𑍋𑌪𑌹𑌿𑌤𑌂) என்கிற ச்லோகத்தினால் அத்திருக்கைகளின் வ்யாபாரத்தை அருளிச்செய்கிறார். ஒன்று தலையணையாயும், ஆச்ரிதர்களுடைய ஸர்வாபீஷ்ட பலத்தையும் கொடுக்கிற மற்றொரு திருக்கை முழங்கால் பரியந்தம் தொங்குகின்றது' என்று ஸாதித்து அவைகளில் தன் மனது கட்டுப்பட்டுவிட்டது' என்கிறார்.

இப்படி திருக்கைகளை அநுபவித்து, இப்பாட்டில் 'செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே' என்று ஆழ்வார் அநுபவித்

ததை 'ஸாபிப்ராய' (ஸாபிப்ராய) என்கிற ச்லோகத்தினல் அநுபவிக்கப் புகுகிறார்.

'பரியனாகி வந்த' என்கிற 8-வது பாட்டில் 'அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகிபுடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப் பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய் தனவே' ஸ்ரீரங்கத்தில் கண் வளர்ந்தருளி ஆச் ரிதர்களுடைய தோஷத்தை எல்லாம் போக் வதனல் தானும் தோஷமற்றவனை பெரிய பெருமாளுடைய திருமுகத்திலே கருவிழிக ளாலே கறுத்து விசாலமாய் மலர்ந்து ஸமீபத் துள்ளார் பக்கலில் ஆதரம் தோற்றும்படி யான உல்லாஸத்தையடைந்து சிவந்த வரிக ளால் வ்யாபிக்கப்பட்டதாய் காதளவும் நீண்ட பெருமையையும் இனிமையையும் உடைய திருக்கண்கள் தன் அழகில் அமிழ்ந்தவென்னை வேறொரு காரியத்திற்கும் உபயோகமில்லாத படி செய்தனவே' என்று திருக்கண்களை வெகு அழகாக அநுபவித்தார் ஆழ்வார். ஸ்ரீதேசிகன் இவ்விரண்டு பாட்டின் அர்த்தத் தையும் சேர்த்து முற்கூறிய ச்லோகத்தினல் 'ஆச்ரிதர் அபேக்ஷித்தபடி செய்கிறோம் என் கிற அபிப்ராயகர்ப்பமான புன்முறுவல் பூத் ததாய் அழகாய கோவைப்பழம் போன்ற திருவுதடுகளை உடையதாய், ஸம்ஸாரதுக்கத் தைப் போக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிற சேதநர்களை தூரத்திலிருந்தே வரவேற்கிற தாய் ஸ்வர்ணதிலகத்தினல் அலங்கரிக்கப்பட் டதாய் ஆச்ரிதர்களை ஆதரவுடன் நோக்குகிற அழகிய திருக்கண்களை உடையதாயுமுள்ள திருமுகமண்டலம் என் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டது' என்று அநுபவித்தார்,

'மால்யைரந்தஸ்ஸ்திரபரிமளை:' (மால்யை ரந்தஃ ஸ்திரபரிமளை:) என்கிற ச்லோகத்தி னல் 'கையினர்' என்கிற பாட்டில் 'துளப விரையார் கமழ் நீண்முடி என்று ஆழ்வார் அநுபவித்ததை ஸ்ரீதேசிகன் தனியாக அநு பவிக்கிறார். தன் நாயகி சூடிக்கொடுத்ததி னல் பெருமை பெற்ற புஷ்பமாலைகளை வைத் துப் பின்னியதால் உள்ளே பரிமளமுள்ளதாய் சுருண்டு அழகியதான திருக்கேசங்களின்மேல் சாற்றப்பட்ட நாநாவித ரத்நங்கள் இழைக்கப் பெற்ற கிரீடத்தில் என் மனது ஈடுபட்டு பெருமை பெற்றது என்கிறார்.

இப்படி அவயவங்களை அநுபவித்து 'ஆல மாமரத்தினிலைமேல்' என்கிற 9-வது பாட் டால் 'அரங்கத்தரவினணையான் கோலமா மணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்ல தோர் எழில் நீலமேனி ஐயோ! நிறைகொண் டது என் நெஞ்சினையே' திருவரங்கத்தில் திருவநந்தாழ்வானுகிற திருப்பள்ளி மெத்தை யிலே திருக்கண் வளர்ந்தருளுகிற திருவரங்கத் தம்மானுடைய, அழகிய ரத்நங்கள் இழைத்த ஹாரமும், முத்து மாலைகளும் அளவற்றவழகை யுடைத்தாய மேகம் போல் ச்யாமளமான திருமேனி, தன் பரிபூர்ணநுபவத்தைத்தந்து என்மனத்தைக்கொள்ளை கொண்டது' என்று ஆழ்வார் அவயவசோபையுடன் சேர்த்து ஸமு தாயசோபையை அநுபவித்தார். இவ்வர்த் தத்தை ஸ்வாமி தேசிகனும் 'பாதாம்போஜம் ஸ்ப்ருசதி' (பாதாம்போஜம் ஸ்ப்ருசதி) என் கிற ச்லோகத்தினல் தான் அநுபவித்தார். இதில் அவயவத்தைக் குறிக்கும் பதம் ஆன வுடன் அதன் அநுபவத்தைக் குறிக்கும் க்ரி யாபதம் வந்தபோது அடுத்த அநுபவத்தைக் குறிக்கும் க்ரியாபதமும், உடன் மறு அவய வத்தைச் சேர அடுத்த அவயவவாசகபதமும் அமைத்து வெகு அழகாக ஸ்வாமி உபபாதித் திருப்பது ரஸிகஜனவேத்யம். இப்படி மூல திருமேனியை அநுபவித்த ஸ்ரீமங்கிகமாந்த மஹாதேசிகன் 'கொண்டல் வண்ணனை' என் கிற 10-வது பாட்டில் என்னுள்ளம் கவர்ந் தானை அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே' அண்டத்திலிருக்கும் ஸகலாத்மாக் களுக்குமதிபதியாய், ஸம்ஸாரமண்டலத்திற்கு ஆபரணமான ஸ்ரீரங்கத்திலே கண்வளர்ந்தரு ளுகிறவனாய் எனக்கு அம்ருதம்போல் பரம போக்யனாய் என் உள்ளம் கவர்ந்தவெம்பெரு மானை ஸேவித்த கண்கள் வேறொரு வஸ்துவை யும பார்க்கமாட்டா' வென்று ஆழ்வார் முடித்

தத்தையும், 'கையினார் என்கிற பாட்டில் விவக்ஷிதமான உத்ஸவமூர்த்தியின் அநுபவத்தையும் சேர்த்து, 'காந்தோதாரைரயமிஹபுஜை:' (காந்தோதாரைரயமிஹ புஜை:) என்கிற ச்லோகத்தினால் தாம் அநுபவிக்கிறார். அபய முத்ரையுடன் திருவாயுதங்களைத் தரிக்கிறதாய், நீண்ட அழகிய திருக்கைகளுடன் திருவநந்தாழ்வானின் மேல் சயனித்திருக்கிற பெரிய பெருமாள் தன் அபரமூர்த்தி (உத்ஸவமூர்த்தி) யாய்த் தன் முன்னே இருந்து கொண்டு ஸ்ரீரங்கமத்தியிலும் என்னுடைய உள்ளத்திலும் தன் தேவிமார்களுடன் என்றும்விட்டகலாதபடிகுடிகொண்டார்என்கிறார்

இப்படி எம்பெருமானுடைய அநுபத்தை வெகு அழகாகத் தாம் அநுபவித்து நம்போல்வாருக்கும் அவ்வநுபவத்திற்குத் துறையாக இம்மாதிரி அரிய பெரியவர்த்தங்களடங்கிய க்ரந்தங்களை இயற்றிய கருணைக் கடலான தூப்புல் வள்ளலை எஞ்ஞான்றும் போற்றி அவருடைய இனிய மொழிகளில் கூடியவரை ஈடுபடுவதே இஸ்ஸம்ஸாரத்திலிருக்கும் நமக்கு உஜ்ஜீவிக்கும் வழி.

*　　*　　*　　*　　*

ஸ்ரீதேசிகன் 'ஜயதி ஸவிதா தேவதாக்ஷ்மி ஜிஹ்வாவிதவஸம்ஸ்ருதி:' என்று ஸாதித்தபடி சிற்றின்பமேலசகந்தமுமற்றவராய் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலிருந்தே ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யாதிநிதியாய் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன். இந்த ஸ்வாமி, 'ரஹஸ்யத்ரயஸாரத்தின் ரஸமுரைப்போன்' என்றும் 'ரஹஸ்யமுப்பத்திரண்டும் ரஸித்துரைப்போன்' என்றும் மஹான்கள் பேசினபடி, ஸ்ரீதேசிகன் க்ரந்தங்களின் உட்கருத்துக்களை அநேகம் சேதநர்களுக்கு உபதேசித்து தத்வஹிதவுருஷார்த்தங்களைத் தெளிவித்து ஸம்ஸாரபயத்தைப் போக்கினராகையாலே 'ஶரணம் ஸவஹிதாநாம்' என்றும் 'பிறவாதே பூமிதனில் பின்னனைத்தும் உய்ய வெண்ணி இறையவனே புரட்டாசித் திருக்கேட்டையில் குருவாய்ப் பிறந்திட்ட' என்றும் மஹநீயர்கள் அநுஸந்தித்தார்கள். இப்படிப்பட்ட ப்ரபாவமுள்ளவர்களும், பகவதவதாரபூதர்களுமான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனையும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் இவர்கள் அவதரித்த நன்னாளில் திருவடி முதல் திருமுடிவரை ஸேவித்து இன்புறுவோமாக.

ह्यध्या हृत्पद्मसिंहासनरसिकहयग्रीवहेषोर्मिघोष
क्षिप्तप्रत्यर्थिदृप्तिर्जयति बहुगुणा पङ्क्तिरस्मद्गुरूणाम् ।
दिक्सौधाबद्धजैत्रध्वजपटपवनस्फातिनिर्धूततत्त
त्सिद्धान्तस्तोमतूलस्तबकविगमनव्यक्तसद्वर्तनीका ॥

நமது குருக்களின் பரம்பரை எவ்விதமிருந்ததென்றால்— ஹ்ருதயகமலமாகிற ஸிம்ஹாஸநத்தில் ஆசையுடன் எழுந்தருளியிருந்த ஹயக்ரீவனுடைய, அலைகள்போல் வரும் கனைப்புகளுடைய சப்தத்தாலே போக்கடிக்கப்பட்ட வாதிகளின் கர்வத்தையுடையதாயும், திக்குகளாகிற மாடிகளில் கட்டப்பட்ட ஜயத்தைக் காட்டும் கொடிகளின் துணிகள் காற்றினுடைய வ்ருத்தியினாலே பறக்கடிக்கப்பட்ட அந்தந்த ஸித்தாந்தங்களுடைய கூட்டமாகிற பஞ்சுக்கொத்துக்கள் போனமையாலே நன்றாய்த் தோன்றுகிற நல்லமார்க்கத்தையுடையதாயும், அநேக குணங்களையுடையதாயும், மனத்திற்குப் பிடித்தமாகவும் விளங்குகிறது.

ஸ்ரீ:

கன்னியீன்ற குருமணிகள்

[ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்யஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

வைஷ்ணவமாஸமென்பதாக மார்கழிமாதத்திற்கோர் சிறப்புண்டு. 'மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்' என்று கீதாசார்யன் புகழ்ந்திருப்பதே அந்தச் சிறப்பிற்குக் காரணம். 'வர்ஷத்திற்கு கர்ப்பாதாநமாஸமாகையும், மாஸாதீசர்க்குள் முதல்வரான கேசவனுடைய மாஸமாகையும், வ்ரதாரம்பம் செய்யும் காலமாகையும், மார்க்கசீர்ஷமாஸத்திற்கு அதிசயம்' என்பதாக இங்கு தாத்பர்யசந்த்ரிகை. கன்னித்திங்களுமோர் வைஷ்ணவ மாஸமாய் திகழ்கின்றது. வைஷ்ணவமான மாஸம் மார்கழி. வைஷ்ணவர்களுடைய மாஸம் உத்தமமான புரட்டாசி. ஸ்ரீவைஷ்ணவதர்சந ஸ்தாபகரான பல ஆசார்யபுருஷர்களையும் மடாதிபதிகளையும் ஈன்று தனக்கொப்புமுயர்வும் சூந்யமான மாஸமானதுகன்னியேயன்றோ? ஆகவே கன்னியீன்ற குருமணிகளோடு ஜயந்திமலரைக் கண்டபூஷணமாகவணிந்தும், கண்ணுற்றும் ஸ்ரீவைஷ்ணவரனைவரும் களிக்கவேணும்.

குருபங்தியாகிற முத்துஹாரத்திற்கு நாயகமணியாய் விளங்குமவர் நம் தூப்புல் குலமணி. யதிராஜனை நாயகமணியாகவருளினர் யதிராஜஸப்ததியில். ஸ்ரீ தேசிகனுக்குப்பிறகு குருபங்க்தி வளர்ந்துவிட்டதனால் ஸ்ரீமத்வேங்கடநாயகனையே நாயகமணியாகக் கொள்வது பொருத்தமுடையதாகிறது. வேங்கடநாயகனும் அவனுடைய மணியுமாயவதரித்தவாசார்யனையே 'நாயகமணி' யென்பது அந்வர்த்தமுமாகும். 'அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்' என்கிற ஆழ்வான் அநுஸந்தானமெம்பெருமானுரைப்பற்றியதாகச் செய்தேயும் பின்புள்ளாரநுஸந்தாநத்தில் தங்கள் தங்கள் ஆசார்யர்களை விஷயமாவர்கள். அதைப் போலவே ஸ்ரீ தேசிகனுடைய 'நாயகமணி' என்றவநுஸந்தானமும். பின்புள்ளோருடைய அவ்வநுஸந்தாநமும் வெவ்வேறுஆசார்யர்களைப்பற்றியதாகையால் குற்றமொன்றுமில்லை. யதீந்த்ரனுடைய திருவடி ஸம்பந்தமும் திருமுடி ஸம்பந்தமும் பெற்று தந்யர்களான ஆசார்யர்களை வணங்குவதாக ந்யாயபரிசுத்தியில் மங்களாசரணம். ஸ்ரீதேசிகேந்த்ரனுடைய திருவடி திருமுடி ஸம்பந்தத்தினால் தந்யர்கள் ஆசார்யர்கள் என்பதாகநம்போன்ற பின்புள்ளார் கொள்ளலாகும். 'கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழுபிறப்பும்' என்று ஆழ்வார் அருளியது. அந்நிலையை யதிராஜன் பக்கல் கொண்டார் தேசிகன். நாம் தேசிகனிடம் கொள்ளுவது பொருத்தமுடையதன்றோ. இவ்வாறான ஸ்ரீ தேசிகனுடையவும், அவருடைய திருவடி அல்லது திருமுடி ஸம்பந்தம் பெற்றவர்களாய் கன்னித் திங்களில் அவதாரம் செய்தருளிய சிலவாசார்யர்களினுடையவும் வைபவங்களைமாத்திரமிப்பொழுது சுவைக்கப் ப்ராப்தமாகிறது.

ஈசாண்டான்

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளை ஆச்ரயித்த முதலிகளில் 'ஈசாண்டான்' என்றவாசார்யன் பரிகணநம் பண்ணப் பெற்றிருப்பது ஸ்ரீதேசிகனுடைய 'குருபரம்பராஸார' ஸ்ரீஸூக்தியாலும் அதற்கு முன்புள்ள ஸம்ப்ரதாய க்ரந்தங்களாலும் தெளிவானது. இவ்வாசார்யன் கன்னிஸ்வாதியில் திருமலை ஸமீபத்திலுள்ள ஈச்சம்பாடி என்கிற அக்ரஹாரத்தில் வாஸிஷ்டவம்ச்யரான ஸ்ரீநிவாஸாசார்யருக்குத் திருக்குமாரராக அவதாரம் செய்தருளினர். 'ஸ்ரீ ஸுந்தரதேசிகன்' என்றும் 'அழகப்பிரான்' என்றும் பிதாவினால் திருநாமம் சாற்றப் பெற்று ஸ்ரீ ஆளவந்தாரால் 'திருமாலிருஞ்சோலை தாஸர்' என்று தாஸ்யநாமம் பெற்றவர். திருமலைநம்பிகளுடைய ஜாமாதா இவ்வாசார்யன். ஆளவந்தார் நியமித்தபடித் திருவேங்கடத் திருப்பதியில் திருமலைமேலெந்தைக்குச் செண்பகப்ராகாரத்தில் ஸ்வர்ண

கூபம் நிர்மாணம் செய்து அந்த கூபத்திலிருந்து திருவேங்கடமுடையானுக்குத் திருமஞ்சனம் ஸமர்ப்பித்துவந்தார். இப்பொழுதும் அந்த ஸுந்தரகூபத்திலிருந்து திருவேங்கடமுடையான் திருவாராதநம் கண்டருளுவது ஸுப்ரஸித்தமானது. ஸந்நிதி ப்ராகாரவெளியில் 'திருமாலிருஞ்சோலை தாஸர்' என்றும் ஓர் திருநந்தனவனமும் இவ்வாசார்யன் கைங்கர்யங்களில் ஒன்று. திருவாராதனகாலத்தில் புஷ்பம் முதலியவற்றைத் தம் தோட்டத்திலிருந்து ஸமர்ப்பித்தும், திருப்பல்லாண்டு பாடுகை வேதபாராயணம் முதலிய வாசிக கைங்கர்யம் செய்தருளிக்கொண்டும் எழுந்தருளியிருந்தார்.

எம்பெருமானர் ஒருக்கால் திருவேங்கட யாத்ரையில் நம்பிகள் நியமநத்தால் இந்த ஸுந்தரதேசிகனிடம் தாபநீயோபநிஷத்தையும் ந்ருஸிம்ஹ மந்த்ரத்தையும் உபதேசம் பெற்றார்.

'பொழிலமரும் வேங்கடவர் புரோஹிதனர் வாழியே
சேண்பகத்தில் பொற்கூபம் செய்துகந்தான் வாழியே
யதிராசர்க்குத் தாபநீயம் ஈந்தருள்வோன் வாழியே

'श्रीलक्ष्मणमुनेर्मन्त्रं नारसिंहमुपादिशत् ।
तापनीयञ्च यस्तस्मै सुन्दरेशाय मङ्गलम् ॥'

இவை முதலியவற்றால் இவ்வாசார்யன் வைபவம் விளங்குகிறது. -'अभिलषितदुरापा ये पुरा कामभोगा जलधिमिव जलौघास्ते विशन्ति स्वयं नः' என்றீசாண்டானும் தாமருளிச் செய்த ஸ்தோத்ரத்திலே நிபந்தித்தார்' என்பதாக இவ்வாசார்யனுடைய கிரந்தமொன்று பரதேவதாபாரமார்த்யாதிகாரத்தில் ஸ்ரீ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இவர் திருக்குமாரராகிய 'ஈச்சம்பாடியாச்சான்' எம்பெருமானர் பக்கலில் ஸந்யாஸம் பெற்று எழுபத்திநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளிலொருவராக நியமிக்கப்பட்டவர். பன்னீராயிரப்படி முதலிய குருபரம்பராகிரந்தங்களில் இவ்வாசார்யன் வைபவங்கள் தெளியலாகும்.

ஸ்ரீ தேசிகன்

கச்சிமாநகரிலே கன்னித் திங்களில் அத்தத்தின் பத்தாநாள் தூப்புல் குலமணியாய்த் தோன்றி 'திருவோணத்தானுலகாளுமென் பார்களே' என்கிறபடி வென்றிப்புகழ் திருவேங்கடநாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்தமண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தருளியவுத்தமன் ஸ்ரீ மந்நிகமாந்தமஹாதேசிகனே. ஐந்து பிராயமான வத்ஸநிலையில் வத்ஸகுருவின் வாத்ஸல்யமூலமானவாசீர்வாதம் வாய்க்கப் பெற்று காவலனெங்கள் கிடாம்பிக் குலபதியப்புளார்தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால் நாவலருந் தென்வடமொழி நற்பொருள் பெற்ற வேற்றமுற்றவராய் மற்ற யாவரும் போற்ற நின்றவரிவ்வாசாரியன். அத்வைதாசார்யரான வித்யாரண்யர், அப்பைய்யதீக்ஷிதர், கிருஷ்ணமிச்ரர் போன்றவர்களும், த்வைதிகளான அக்ஷோப்ய முநி முதலியவர்களும், 'சீரொன்று தூப்புல்' தனியனிட்டு லோகாசார்யரும் ஸப்ததிரத்நமாலிகையினால் அண்ணனும், வைபவப்ரகாசிகைமூலம் மஹாசார்யரும் பின்புள்ளாரும் பலபடிகளில் பத்தரேத்தும் தூப்புலற்புதன் பெருமையைப் பேசியிருப்பவைப் பேற்கவுர் பேருவே. 'கவிதார்க்கிகஸிம்ஹம், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், வேதாந்தாசார்யர், ஸமஸ்யா ஸஹஸ்ரீ,என்று திவ்யதம்பதிகளும் அடியார்களுமளித்துள்ள பிருதாவளியை யணிந்தவர் நம் தூப்புல் குலவிளக்கே. சாஸ்த்ரங்களாலும் ஆழ்வார்கள் அநுஷ்டாநங்களாலும் ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தஸ்தாபநம் செய்தருளியது ப்ரதாநமான இவ்வவதாரப்ரயோஜநமாகும். 'अस्मद्देशिकसंप्रदायरहितैरद्यापि नालक्षितः' ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணித்தும் அர்ச்சாவதாரத்திலே, என்றும் 'அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்– அஸ்மதாதிகள், ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்– பூர்வாசார்யர்கள், பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்– ஆழ்வார்கள், என்றும் இருக்கிற ஸம்ஸாரத்தில் கொடுமையாலும், பேற்றில் த்வரையாலும் ஸமர்ப்பணம் பண்ணியல்லது நில்லாதிறே சைதந்ய ஸ்வபாவம்.' ஸமர்ப்பணம் பண்ணினவன் ஸ்வ

ரூபஜ்ஞாநம் பிறந்தால் ப்ராயச்சித்தம் பண்ண வேண்டாவோவெனில், வேண்டா, ... யதாவத் ப்ரபத்தியான ஆத்மஸமர்ப்பணம் பண்ணினவனுக்கு ஸர்வப்ராயச்சித்தமும்கூடி ஸர்வப்ராயச்சித்தமும் பண்ணினனாகக்கடவன் என்றிவ்வாறாக ஸ்ரீவசநபூஷணம், தநிப்ரணவம் முதலியவற்றில் லோகாசார்ய ஸூக்தி. எம்பெருமானார் சரணாகதியநுஷ்டாநம் செய்தருளியதையும்கத்யவ்யாக்யாநங்களிலேச்ருதப்ரகாசிகாசார்யரும் ஆச்சான் பிள்ளையும் ஸ்தாபித்தருளினார்கள். அது விஷயத்தில் பின்புள்ளார் சிலர் அவற்றுக்கு மாறுபட்ட நிலையில் நிற்பதை நீக்கியருளி ஸ்வாமி தேசிகன்—'ஏதேனுமொரு ப்ரகாரமாகவுமாம் ஆரேனுமொருவர் அனுஷ்டிக்கவுமாம் ப்ரபத்திக்கல்லது ஸர்வேச்வரன் பரமபுருஷார்த்தம் கொடுக்கவிராங்கான்' என்று ஸித்தாந்தத்தை நிக்ஷேபரக்ஷை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலியவற்றில் அஞ்சுருவாணியாய் ஸ்தாபநம் செய்து 'ஐயனிலங்கு தூப்புல் பிள்ளையாய்ந்த பொருளன்றி யுய்யும் வகையில்லை' என்பதை நிலைநாட்டியருளினார் வாழியணிதூப்புல் வரு நிகமாந்தாசிரியன்.

ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் சிஷ்யப்ரசிஷ்யர்களாகிய ஆசார்யர்களை ப்ரதாநமாக உடைய மூன்று மடங்கள் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே திகழ்கின்றன. ஸ்ரீ பரகாலமடம், ஸ்ரீமதஹோபிலமடம், ஸ்ரீ வானமாமலைமடம் ஆகிய இம்மூன்று மடங்களிற்கும் அதிபதிகளானவாசார்யர்கள் மூவரும் கன்னித் திங்களிலேயே திருவவதாரம் செய்தருளினவர்கள். 'ஓதாதோதும் வேதாந்தாரியனு' தயம் செய்திடுநாளாகிய உத்தமமான புரட்டாசித் திருவோணமெனுநாளே ஸ்ரீமத்ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமியின் திருவவதார நன்னாளுமாகும்.

இவ்வாசார்யன், முன்பு ப்ரஸ்துதரான ஈசாண்டானுடைய நப்தாவின் பௌத்ரராகிய ஸ்ரீ ராகவார்யமஹாதேசிகனுக்கு திருக்குமாரராக திருமலையில் அவதாரம் செய்தருளினர். திருத்தகப்பனரிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெற்று ஸ்ரீ தேசிகனிடம் ஸர்வார்த்தக்ரஹணம் செய்தருளியவர். எம்பெருமானாருக்கு ஸரஸ்வதியினால் அநுக்ரஹிக்கப்பெற்ற ஹயக்ரீவமூர்த்தியானவர் எம்பெருமானாரால் பிள்ளானுக்குப் ப்ரஸாதிக்கப்பட்ட அந்தத் திருவம்சத்திலே அவதரித்துள்ள புண்டரீகாக்ஷருக்கு ஆராத்யராயெழுந்தருளியிருந்து ஸ்வப்நநியமநத்தாலே ஸ்ரீதேசிகனுக்காராத்யராகி ஸ்ரீதேசிகனால்ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமிக்கு ப்ராப்தமாகி ஸ்ரீபரகாலமடத்தில் ஆராத்யதேவதையாய் விளங்கிவருகின்றார். வடதேசத்திலிருந்துவாதம்செய்யவந்தமஹாவித்வான் ஒருவனை ஸ்ரீதேசிகன் நியமனம் பெற்று, சததூஷணி முதலிய கிரந்தமுகத்தாலே ஜயித்ததினால் ஸ்ரீதேசிகன் போறவுகந்து 'நீர் ப்ரஹ்தந்த்ரஸ்வதந்த்ரர்' என்றருளிச் செய்த திருநாமமிது. பின்பொரு ஸமயம் காசிவாஸியான வோர் ப்ரஸித்த வித்வானை வாதத்தில் வென்று தேசிகனைத் திருவடித் தொழுது அந்த வித்வானையும் திருவடிகளிலே சேர்ப்பித்து நிற்கும்போது 'நீர் பர்யாயபாஷ்காரர்' யுக்திகல்பநத்திலும் 'அப்போதொரு சிந்தை செய்தே' என்கிறபடியே ப்ரஹ்மஸ்ருஷ்டிபோலே வேண்டினபடி சொல்லக்கடவீர்' என்று ஸ்ரீ தேசிகன் உகந்தருளினார். அதனால் இந்த மூன்று திருநாமங்களையும் அமைத்து கடிகாசதம் அம்மாள் அருளிய தனியனிவ்வாறு:—

पर्यायभाष्यकाराय प्रणतार्तिं विधून्वते ।
ब्रह्मतन्त्रस्वतन्त्राय द्वितियब्रह्मणे नमः ॥

என்று. இவ்வாசார்யனுடைய பூர்வாச்ரமத் தனியன்:—

हस्तीशं लोकविख्यातं कौण्डिन्यं विदुषां वरम् ।
रामानुजार्यसिद्धान्त स्थापनाचार्यमाश्रये ॥

என்பது. இவர் அருளிய பரபந்தம் 'திவ்ய ஸூக்தி ஸ்தோத்ரம்' என்பது. இது ஆழ்வார் ஆசார்யர்களுடைய திருவவதாரத்தைப் பற்றியது. மூவாயிரப்படி குருபரம்பரை முதலியதில் இவருடைய வைபவம் பரக்கக் காணலாம்.

ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்

புரட்டாசிக் கேட்டைதனில் இவ்வாசார்யன் திருவவதாரம் அமைந்தாப்போல் திருத்

தகப்பனாராகிய கிடாம்பி கேசவாசார்யரும் அவதரித்தருளியதும் பிதாமஹனாகிய ஸ்ரீநிவாஸமஹாதேசிகனும் புரட்டாசித் சிரவணத்தில் திருவவதாரம் பெற்றிருப்பதும் நினைக்குங்கால் கந்யாமாஸமென்பது ஓர் ஸ்ரீ வைஷ்ணவமாஸம் என்று அடியேன் முன் விஜ்ஞாபித்ததை த்ருடமாகக் கொள்ளலாமன்றோ? ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி திருவடிகளான 'கடிகாசதம் அம்மாள்' ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய, ரஹஸ்ய, பகவத்விஷயங்களாகிய க்ரந்தசதுஷ்டயமும் காலக்ஷேபம் செய்தருளி திருத்தகப்பனார் கேசவாச்சாரியர் திருவடிகளில் பஞ்சஸம்ஸ்காரம் பெற்று இருபதாவது திருநக்ஷத்ரத்திலேயே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்வப்நத்தினால் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலிருந்தே ஸ்ரீமதஹோபிலத்தில் ஸந்யாஸம் பெற்று ஸ்ரீ மாலோலந்ருஸிம்ஹனை ஆராத்யதேவதையாகக் கொண்டு ஸ்ரீமதஹோபிலமடத்தை ப்ரதிஷ்டாபநம் செய்து லோகோஜ்ஜீவநம் செய்தருளிய விலக்ஷணவைபவமிவ்வாசார்யனுக்கு அஸாதாரணமானது. ஸத்ஸம்ப்ரதாயமுக்தாவளியென்னும் ஸ்ரீஸந்நிதி குருபரம்பரையில் ஸுவிசதமாகப் பார்க்கலாம்.

எம்பெருமானாரிடமிருந்து கங்கைபோல் ஸம்பிரதாயம் மூன்றுபிரிவாகவுள்ளது. கிடாம்பியாச்சான் மூலமாக ரஹஸ்யகிரந்தஸம்பிரதாயம், பிள்ளான் மூலம் மற்ற மூன்று கிரந்த பரம்பரை. எம்பார் மூலமாக ஓர் ஸம்பிரதாயம். இவை மூன்றும் சேர்ந்தவோர் மஹா தடாகம் நம் ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன். தமது திருத்தகப்பனார் பக்கல் பஞ்சஸம்ஸ்காரமாகையால் எம்பார் ஸம்பந்தமும் ரஹஸ்யகிரந்தங்களிலும், ஸ்ரீபாஷ்ய, கீதா பாஷ்ய, பகவத்விஷயங்களிலுமாக ஆச்சான், பிள்ளான் ஸம்ப்ரதாயமுமிவ்வாசார்யனுக்கு வாய்த்துள்ளது. இவ்வாசார்யன் திருவடியான ஸ்ரீமந்நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் மூலமாக ஸ்ரீமதஹோபிலமடத்து ஸம்பிரதாயமும், மற்றொரு சிஷ்யரும் கடிகாசதம் அம்மாள் என்கிற வாத்ஸ்யவரதாச்சாரியர் திருக்குமாரான வரதவிஷ்ணவாச்சாரியர் மூலம் ஸ்ரீமுநித்ரயஸம்ப்ரதாயமும் ப்ரவர்த்திக்கின்றமையால் உபயஸம்ப்ரதாயத்திற்கும் ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன் ஆசார்யபதம் பெற்று விளங்குகின்றார்

ஸ்ரீவானமாமலை ஜீயர்

ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன் பக்கல் ஸந்யாஸம் பெற்று விக்யாதராயுள்ள ஸ்ரீமணவாளமாமுனிகளுடைய ஸாக்ஷாத் சிஷ்யர். ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி திருவடிகளான கிடாம்பி நயினார் திருவடிகளில் ஸ்ரீபாஷ்யாதி ஸம்பந்தம் பெற்றவர் மாமுனிகள். ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகனைப் போல் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலிருந்தே ஸந்யாஸம் பெற்று மடாதிபதியாய் விளங்கியவர். இவர் வைபவத்தை ஸ்ரீவானமாமலைமட குருபரம்பரையில் காணலாம். புரட்டாசி புனர்வஸு இவர் அவதாரம்.

திருக்குடந்தை தேசிகன்

உபநிஷத்பாஷ்யகாரர் திருவடிகளான ரங்கநாதஸ்வாமி என்னும் ஆசார்யன் புரட்டாசி சிரவணத்தில் அவதாரம் செய்தருளியவர். இவர் சிஷ்யபரம்பரையில் திருக்குடந்தை தேசிகன் புரட்டாசிப் பூராடத்தில் அவதாரம் செய்தருளி பிதாவினிடம் பஞ்சஸம்ஸ்காரமும் ஸாக்ஷாத் ஸ்வாமி ஸந்நிதியில் க்ரந்தாந்வயமும் பெற்று அபர தேசிகனாய் விளங்கியவர். ஸ்ரீமத்ஸாராஸ்வாதிநீ, நிக்ஷேபசிந்தாமணி முதலிய பல கிரந்தங்கள் இவர் அருளியவை. இவ்வாறான கன்னியீன்ற குருமணிகளின் வைபவங்களை நித்யாநுஸந்தானம் பண்ணி தந்யர்களாவோமாக.

ஸ்ரீ:

வித்தகன் வேதியன் வேதாந்ததேசிகனின் வாழித்திருநாமச் சிறப்பு

ஸ்ரீ.உப.ஓரகடம், ஸுதர்சநாச்சாரியர் ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.

பூமன்னுமாது பொருந்திய மார்பரான ஸ்ரீதிருவேங்கடமுடையானது திருமணியாழ்வாரினம்சபூதராய் 'முத்திதரும்நகரேழில் முக்கியமாம் கச்சி' என்றும், 'ஆன்மேவு பெருமானு மலரோனும் வந்திக்கும் அற்புதக்கச்சி' என்றும், 'சத்தமழை தவழ்காவில் வளர்கிளியுமாழ்வார் தமிழ் பகர் திருக்கச்சி' என்றும், சீர்மையுடன் போற்றப்படும் கச்சிமாநகரிலே அந்தணர் குலத்தை விளக்கவந்த அநந்தஸூரிகளின் அருந்தவப்பயனாய் அவதரித்தருளி 'ஆசார்யன்' என்னும் பொருளுடைய 'தேசிகன்' என்னும் ஒப்புயர்வற்ற திருநாமத்தைப் பெற்று ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தத்தைச் செழித்தோங்க வளர்வித்தருளிய ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனின் தனிப்பெருஞ்சிறப்பு வர்ணனைக்கு அடங்காததாகும். ஸ்ரீஸ்வாமியின் குணோத்கர்ஷங்களையும் மற்றும் பல ஸதநுஷ்டாநங்களையும், ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜரான ஸ்ரீ நைனாராசார்யர், தமது திருத்தமப்பனாரும் ஆசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாததேசிகன் அநுக்ரஹத்தால் பரக்க உணர்ந்து, அவற்றைத் 'தினசரி' 'ப்ரார்த்தனாஷ்டகம்' 'பிள்ளையந்தாதி' முதலிய க்ரந்தங்கள் மூலமாக உலகுக்கு வெளியிட்டருளினார். இவை தவிர ஸ்ரீதேசிகனுடைய வாழித்திருநாமப் பாசுரங்களும் ஸ்ரீகுமாரதேசிகனால் பின்புள்ளாருஜ்ஜீவநார்த்தம் அருளிச் செய்யப்பட்டவைகள் தாம். ஸ்வாமி தேசிகனுடைய கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரள் யாவரும் தத்தம் திருமாளிகையில் தினந்தோறும் திருவாராதன காலத்தில் வாய்குளிர மனங்குளிர வாழ்த்திப் போற்றிவரும் இவ்வாழித் திருநாமத்தின் ஒவ்வோர் அடியும் பொருத்தமான பொருட்சுவை பொதிந்து அன்பர் மனத்திற்கு அருவிருந்தாகிப் பெருமகிழ்வூட்டுகிறது. எங்கோ சிறுபான்மையாகத் தமிழறிஞர் சிலர் இவ்வாழித் திருநாமத்தின் பொருட்பொலிவை ரஸித்துச் சுவைக்கிறார்களேயன்றி ஏனையோர் ரஸிப்பதில்லை. மற்றும் சிலர் காதில் கேட்ட மாத்ரத்தைக்கொண்டு அதனைப் பிழைபடவும் ஸேவிக்கிறார்கள். இது வருந்தத்தக்கதாயிருக்கிறது. இவ்வாழித்திருநாமத்தின் அடிகளிற்பொதிந்துள்ள பொருட்சுவையைச் சிறிதளவு எடுத்துக்காட்ட முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாழித்திருநாமப் பாசுரங்கள்

1. வாழி யிராமா நுசப்பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு — வாழியவன்
மாறன் மறையுமிரா மாநுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர்

2. வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே

கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
செந்தமிழ்த்தூப் புல்துருவேங் கடவன் வாழியே

3. நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரில் மாறன் மறைவாழ— ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே!
இன்னமொரு நூற்றாண் டிரும்.

வாழித் திருநாமங்களின் விளக்கம்

வாழியிராமானுச... ... ... சீர்:— இராமானுசப் பிள்ளான் எனப்படும் ஸ்ரீ அப்புள்ளாரது மாபெரும் அருளால் வாழ்ச்சி பெற்ற சமதமாதி கல்யாணகுணங்களால் அலங்க்ருதரான ஸ்ரீநிகமாந்தமஹாகுருவுக்குப்பல்லாண்டு; மயர்வற மதிநலமருளப் பெற்ற மாறன் எனப்படும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியென்னும் தமிழ் வேதமும், ஸ்ரீபகவத்ராமாநுஜன் அருளிய ஸ்ரீமத்பாஷ்யமும், உலகில் யாவரும் உய்ந்து கடைத்தேறும்படி ஸாதித்தருளும் பரமௌதார்ய குணத்திற்குப் பல்லாண்டு.

வஞ்சப்பர... ... ... வாழியே:—'கலியுங் கெடும் கண்டுகொண்மின்' என்று ஆழ்வார் அருளிச்செய்ததை மெய்ப்பிக்க இந்நிலவுலகில் அவதரித்தருளிய ஸ்ரீபகவத்ராமாநுஜன் உயிர்க்கு உறுதிபயக்கக்கூடிய உண்மைப் பொருள்களை உலகினர்க் குணர்த்தி உய்வித்துத் திருநாட்டுக்கெழுந்தருளியபின்னர், மீண்டும் கலிபுருஷனின் கோலாஹலத்தினால் ஜனஸமூஹத்தில் பல்வகைப்பூசல்கள் தோன்றலாயின. எம்பெருமானார் அருளிய க்ரந்தங்களில் பலவகைப்பட்ட விவாவதங்களை எழுப்பினர் சிலர். ஸ்வாமி திருவுள்ளத்திற்கு விரோதமான அர்த்தங்களைக் கூறி வாதப்போர் புரிய முன்வந்தனர் சிலர். அத்தகையோரது வஞ்சப்பல சமய வாதப் போரை மாற்றுவித்து பகவத்ராமாநுஜஸித்தாந்தத்தின் உண்மைப் பொருளை உலகினர்க்கு உணர்த்தியருளிய தூப்புல் குலமணிக்குப் பல்லாண்டு. அறியாமையினாலோ, வஞ்சனையினாலோ, உண்மைப் பொருள்களைத் திரித்து வெளியிட்டு ப்ரசாரம் செய்துகொண்டிருந்த வாதிகளாகிய யானைகளின் செருக்கொடுங்கும்படி காலக்ஷேபங்களாலும் கண்டநக்ரந்தங்களாலும் எம்பெருமானருடைய திருவுள்ளத்தின் மெய்ப்பொருளை வெளியிட்டு வீறுபெற்று விளங்கியவர் நம் ஸ்வாமி. இதனாலேயே 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்று யாவராலும் புகழும்படி திருநாமம் பெற்றார்.

'ஶௌர்யோயோணா யஷூஷஂ கவிதாகிஂக குஞ்ஜராஃ । வஸைவ ஞாஸஷாவாநிஂ த்யஂ ஸிஂஹஂ கவேிதஂ ஹஜெ ॥' 'வியன்கலைகள் மொய்த்திடுநாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் கைத்தவன்' என்பன இங்கு அநுஸந்தேயங்கள்.

மன்னுபுகழ்... ... ... வாழியே:— நிலைபெற்ற புகழையுடைய ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்த ஸ்ரீபகவத்ராமாநுஜனுடைய திருவுள்ளத்தை உகப்பித்தவனுக்குப் பல்லாண்டு என்பது இவ்வடியின் பொருள். 'யதிராஜநிஙநாயகஶ்ரீஃ' 'ஹேதீஶாவதிஹாஙயஷ்ிஃ' என்றபடி எம்பெருமான் பெரிதும் திருவுள்ளம் உகந்தருளும் ஆசார்யகோஷ்டியாகிய மணிமாலையிலே நடுநாயகமணியாய் விளங்குபவர் எம்பெருமானார். இப்படி விளங்குவதனால் அவருக்கு முன்பிருந்த ஆசார்யர்கள் அவரது திருமுடிஸம்பந்தம் பெற்றும், அவருக்குப்பின் வந்த ஆசார்யர்கள் அவரது திருவடிஸம்பந்தம் பெற்றும் பெரிதும் விளங்கினார்கள் என்பது வெளிப்படை. அத்தகைய எம்பெருமா

ஞாரது வாழ்வுறு நல்தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து, பிரதிவாதிகளை நிரஸித்து, அவரது திருவுள்ளத்தைப் பெரிதும் உகப்பித்தவர்களுள் தலைசிறந்தவர் ஸ்வாமி தேசிகன். எம்பெருமானார் அருளிய க்ரந்தங்களில் முதன்மை பெற்றது ஸ்ரீபாஷ்யம். அதனர்த்தங்களைத் தெளிய உரைப்பது ஸ்ரீ ஸுதர்சநபட்டர் அருளிய ச்ருதப்ரகாசிகை. ஸ்ரீரங்கத்தில் துருஷ்கர்களால் எற்பட்ட கலாபத்தில் ஸ்ரீரங்கநாதன் திருவரங்கப்பெருநகரை விட்டு எழுந்தருளும்படி நேரிட்டபோது, ஸ்ரீ தேசிகன் பெருமாளுடன் அநுயாத்ரையாகச் செல்லப் புறப்படுங்கால், ஸுதர்சநபட்டர் இடைமறித்து ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாஸஹிமான ஸ்ரீ பாஷ்யத்தையும் தம்திருக்குமாரர்கள் இருவரையும் அவரிடம் ஒப்புவித்து ‘பெருமாளுடைய அநுயாத்ரையினும் ஸ்ரீ பாஷ்யத்தைக் காப்பாற்றி; ப்ரவர்த்திப்பது பன்மடங்கு சிறந்த கைங்கர்யம் இதைச் செய்யும்’ என்று அருள, அங்கனமே ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பட்டரின் நியமனத்தைச் சிரஸாவஹித்து அவ்விரு குமாரரையும் ஸ்ரீ கோசத்தையும் உடன்கொண்டு தமக்கு நேரும் இடையூறுகளுக்கு அஞ்சாது ஸ்ரீ கோசத்திதை மணலில் புதைத்து வைத்தும், தாமும், பிள்ளைகளும் துருக்கர்களால் கொன்று குவித்த பிணங்களிடை ஒளிந்தும் இவ்விதமாக க்ரந்தபரிரக்ஷணம் பண்ணி, விடிந்தவாறே ஸத்யமங்கலத்திற்கெழுந்தருளி ஸ்ரீ பாஷ்யகாலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். தவிர; ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸ்ரீ பாஷ்யத்திற்கு அடுத்தபடி நிற்பது கத்யத்ரயம். இவைகளுக்கும் ஸ்வாமி வ்யாக்யானம் செய்தருளியிருக்கிறபடி. இப்படிப் பல்படியாலும் மன்னுபுகழ்ப்பூதூரான் மனத்தை உகப்பித்திருக்கிறார் ஸ்வாமி தேசிகன். ‘[illegible]’ என்று ஸ்ரீ நயினாராசார்யர் வியந்து கூறியவண்ணமே, ஸ்ரீ பெரும்பூதூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானாரது அர்ச்சாவதாரத் திருமேனியைப் போன்ற பரமகம்பீரமான திருமேனியுடனே ஸ்வாமி தேசிகனும் தமது திருவவதாரஸ்தலமாகிய தூப்புலில் ஸேவை ஸாதித்தருள்வதைக் கவனிக்குங்கால், தேசிகன் எம்பெருமானாருடைய திருவவதாரம்தான் என்றும் ஸ்ரீநயினாராசாரியரது அருளிச்செயல் அந்வர்த்தமானதென்றும் நிஷ்கர்ஷிக்க இடம் உண்டாகின்றதன்றோ? இப்படித் திருமேனி உருவினாலும் ஸ்ரீ பாஷ்யப்ரவசநத்தாலும் ‘ஸப்ததி’ அருளிச்செயலினாலும் மன்னுபுகழ்ப்பூதூரான் மனத்தை நம் தூப்புல் குலமணி எவ்வளவு உகப்பித்திருக்கிறாரென்பது இன்றும் யாவர்க்கும் தெரியவருகிறது.

கஞ்சத் ... ... வாழியே:— செந்தாமரை மலரில் உதித்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் திருவுள்ளம் உகக்கும்படி அவதரித்தவனுக்குப் பல்லாண்டு. கருணாஸ்வரூபியும் புருஷகாரபூதையுமான பெரியபிராட்டியாரின் கல்யகணகுணங்களை ஸ்ரீ ரஹஸ்யரக்ஷையிலும் ஸ்ரீ சதுச்லோகீ பாஷ்யத்திலும் விசதமாகக் காணலாம். ‘மோக்ஷோபாயம் முடிவு பெறவேண்டுமென்று ஆசையுடையவர்களாகிய எவர்களுக்கு எல்லா லோகங்களுக்கும் சரண்யனான பகவானும் சரண்யனாகமாட்டானோ, அத்தகையவர்களுக்கும் இவள் சரண்யை என்றும் பகவானிடத்தில் அநந்யமாகிய உபாஸநம் உண்டாவதற்காகக் கர்மயோகம் முதலியன எப்படிச் செய்யப்படுகின்றனவோ, அப்படி, அநந்யையாகிய பகவானிடத்தில் ப்ரபத்தி ஸித்திப்பதற்காகச் செய்யப்படுகிற இந்த லக்ஷ்மீப்ரபத்தியும் அவற்றைப் போலவே எகாந்தியாயிருக்கும் தன்மையையே உறுதிப்படுத்துகின்றது’ என்றும், இவர் ஸ்ரீ ரஹஸ்யரக்ஷையில் அருளிச்செய்திருப்பது திருமங்கையின் திருவுள்ளத்தை உகப்பிப்பதற்குப் பெரிய சான்றாகும். தம் திருவுள்ளம் உகந்த காரணத்தால் போலும், ஸ்ரீரங்கநாச்சியார் தம் ஸந்நிதி முன்பே ஸ்வாமிக்கு அர்ச்சாவதாரத்தில் ஸந்நிதி பண்ணுவித்துத் தன்னை ஸதா மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருக்கும்படி நியமித்தது!

கலியனுரை ... ... வாழியே:— வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன், தாம் அருளிய செந்தமிழ் மணங்

கமழும் பரம கம்பீரமான திவ்யப்ரபந்தங்களால் எப்படி பரமதத்தினருக்குக் காலன் போல் விளங்கினாரோ அவ்வண்ணமே இவரும் பரம கம்பீரமான தமது சததூஷணீ முதலிய ஸம்ஸ்க்ருத திவ்யஸூக்திகளாலும் பரமதபங்கம் முதலிய செந்தமிழ் ப்ரபந்தங்களாலும் அறுசமயக் குறும்பறுத்தும், வாதியர் தம் வாய்ப்பகட்டை மாற்றியும் பரசமயக் கோளரியாக விளங்கிவந்தார். ஆசு– மதுரம்– சித்திரம்– விஸ்தாரம் எனும் நாற்கவி மழை பொழிந்த கருணைமுகிலான கலியன்போல இவரும் பல்வகைப்பட்ட நயங்களும் நிரம்பின செந்தமிழ்க் கவிமழை பொழிந்து தம் அடியார்களைக் குளிர்வித்திருக்கிறார். அன்றியும் இவர் அருளிச்செய்த 'அம்ருதரஞ்சனி' முதலிய ப்ரபந்தங்கள் இருபத்து நான்கும் சொல்லழகிலும், பொருட்பொலிவிலும், சந்த இனிமையிலும், காம்பீர்யத்திலும் கலியன் கவிகளை அடிபொற்றியனவாய் அமைந்துள்ளன. தவிர: சில திவ்யதேசத்து எம்பெருமான்களுக்குக் கலியன் இட்ட திருநாமத்தையே தமது ஸ்தோத்ரங்களிலும் ப்ரபந்தங்களிலும் இவர் வழங்கியிருக்கிறார். [கலியன் அருளிய 'புட்குழியெம்போரேற்றை' என்பதை ஸ்வாமி 'ரணபுங்கவன்' என்றாற்போலக் கொள்க] இவைகளிலிருந்து இவர் திருவுள்ளத்தில் கலியன் எத்தகைய இடம் பெற்றிருக்கிறாரென்பதை வாசகர்கள் அறியவேணும்.

செஞ்சொல் ... ... வாழியே:— மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களிலே இவருக்கு எத்தகைய பக்தி உண்டென்பது, இவர் அருளிச்செய்த 'ப்ரபந்தஸாரம்' என்னும் ப்ரபந்தத்தை ஆராய்வோருக்கு நன்கு விளங்கும். 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்றும்' எத்திசையும் வாழவிவை பாடிவைத்த என்பவை நாலாயிரமும் எங்கள் வாழ்வே' என்றும் இவர் தாமே அருளிச்செய்திருப்பது, ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் இவருக்கு எவ்வளவு ஆர்வம் என்பதை விளக்குகிறது. 'மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேற்றியடிமை கொள்ளத் தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் தலை வைத்தோம் சடகோபனருளினாலே' என்றிவர் பாடியிருப்பதும், திருவாய்மொழிப்பாசுரங்களுக்கு வ்யாக்யானரீதியில் வடமொழியில் 'த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி' த்ரமிடோபநிஷத்ஸாரம்' என்று இரண்டுக்ரந்தங்கள் அருளியிருப்பதும், ஆழ்வார்கள் பதின்மரையும் அவயவமாகக்கொண்ட நம்மாழ்வாரிடம் இவருக்குள்ள பக்திவிசேஷத்தைப் புலப்படுத்துகிறது. அன்றியும் ஸ்வாமி ஸாமவேதஸாரமான திருவாய்மொழிக்கு நிகமபரிமளம் என்னும் எழுபத்தீராயிரப்படி என்றொரு விஸ்தாரமான வ்யாக்யாநம் இயற்றியருளினாரென்றும் அது இப்போது லுப்தமாய்விட்டதென்றும் பெரியோர் கூறுகிறார்கள். இவற்றால் ஏனைய ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் உள்ள ரஹஸ்யார்த்தங்களை பலபடியாகப் ப்ரகாசிப்பித்து, ஆழ்வார்களின் திருவுள்ளங்களை உகப்பித்து வந்தார் ஸ்ரீ தேசிகன் என அறிகிறோம்.

திருமலைமால் ... ... வாழியே:— திருமலைமால் என்பவர் ஸ்ரீநிவாஸன். ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தஸ்தாபநார்த்தம் ஸ்ரீ திருவேங்கடமுடையான் தன் கருணைப் பெருக்கினால் அநந்தஸூரிகளுக்கு அளித்தருளிய திருமணியாழ்வாரே அப்பெருமானது தீர்த்தவாரித் திருவோணத்தில் ஸ்ரீ தேசிகனாக அவதரித்தருளினாரென்பது ஸுப்ரஸித்தம். அவ்வைபவத்தை இக்காலத்தினரும் உணரக்கூடியவாறு, இப்போதும் திருமலையில் திருவேங்கடமுடையான் திருவாராதனம் கண்டருளும்போது கைம்மணி ஸேவிக்கப்படாமல், பெரிய நிலைமணி மாத்ரம் ஸேவிக்கப்பட்டுவருவது கவனிக்கத்தக்கது.

தஞ்சப் ... ... வாழியே:— சேதநர்களின் ஆத்மோஜ்ஜீவநார்த்தம் சரணாகதிமார்க்கத்தின் ரஹஸ்யார்த்தவிசேஷங்களை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், சரணாகதிதீபிகை, அபயப்ரதாநஸாரம் முதலிய க்ரந்தங்களில் விரிவாக விளக்கிக் காட்டி உலகுக்கு உபகரித்தருளிய மஹோபகாரம் ஒப்புயர்வற்றது. 'நின்னருளாம்

கதியன்றி ... ... என்னை நீயே' என்று இவர் அம்ருதாஸ்வாதிநியில் அருளிச்செய்த பாசுரத்தால் பெரியபிராட்டியாரை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் சரணமடைவதே நமது வாழ்வில் நாம் செய்யவேண்டிய தனிப்பெருங்கடமையென்று வெளியிட்டருளினது நமக்கு ஒரு நிகரற்ற உபகாரமன்றோ? அப்படிப்பட்டவர்க்குப் பல்லாண்டு.

செந்தமிழ் ... ... வாழியே:— அன்றிவ்வுலகினையாக்கி ... ... தவிர்த்தனனே' என்று பிள்ளையந்தாதியில் ஸ்ரீநயினாராசார்யர் அருளினபடி, ஸ்ரீ திருவேங்கடமுடையான் சேதநர்களைத் திருத்திப் பணிகொள்ளக்கருதி தானே தனது கருணை ப்ரவாஹத்தால் மேற்கொண்ட ஆசார்யாவதாரமே ஸ்வாமி தேசிகன் என்பது பெரியோர்கள் ஈடுபாடு. இதனாலேயே அன்பர்கள் 'தெங்கொடு மாங்கனி தேன்சுனை வேங்கடத்தீசர் பிறந்திடுநாள்' என்று ஸ்வாமியின் திருநாளைப் போற்றி வருகின்றனர். 'சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு' வென்று ஸ்வாமி தாமே மொழிந்ததும் திருவேங்கடவனுக்கிட்ட அடைமொழியை வலியுறுத்தும்.

நானிலமும் ... ... இரும்:— குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் எனப்படும் நால்வகை நிலங்களும் சேர்ந்த) பூவுலகம் ஸுகமாக இருக்கட்டும்; (ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் எனப்படும்) நால் வேதங்களும் விளங்கட்டும்; தேசமெங்கும் நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதம் வாழ்ச்சி பெறட்டும்; ஜ்ஞானவான்களுக்குச் சிரோபூஷணமாய் விளங்கும் தூப்புலில் திருவவதரித்த ஸ்ரீ வேதாந்ததேசிகனே! இன்னம் ஒரு நூற்றாண்டு வாழக்கடவீர்.

இத்தகைய ப்ரபாவத்துடன் ஸ்ரீரங்காதி திவ்யக்ஷேத்ரங்களிலும், மற்றுமுள்ள ஸ்தலங்களிலும் அர்ச்சாரூபியாய்க் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமி தேசிகனை வாயார வாழ்த்தி மனமாரப் போற்றி வணங்கி வழிபட்டுப் பூஜித்து மகிழ்வதைக் காட்டிலும் இவ்வுலகில் நாம் பெறக்கூடிய சீரிய தனிப்பெரும் பேறு வேறு என்ன இருக்கிறது?

यदीयचरितं सतां सुचरितव्यवस्थापकं यदीयवचनं परं सकलसंशयोन्मूलनम् ।
यदीयकरुणागतिस्सकलधर्मशून्यात्मनां स नश्शरणमस्त्वसौ सकलतन्त्रनिर्वाहकः ॥

[ஸப்ததிரத்நமாலிகை 21]

(யாதொரு ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுடைய திவ்யசரிதமானது ஸத்துக்களுக்கு நல்ல சரிதத்தை நிர்ணயம் செய்துகொடுப்பதாக இருக்கிறதோ? (ஸ்ரீ தேசிகனுடைய ஜ்ஞாநாநுஷ்டானவடிராக்யத்தையறிந்து அதேபோல் நடக்க உதவுகிறதோ என்றபடி.) யாதொரு தூப்புல் குலபதியின் வசநமானது (க்ரந்தங்களானது) இதரர்களுடைய க்ரந்தங்களினால் ஏற்படக்கூடிய எல்லா ஸம்சயங்களையும் தீயினிற்தூசுபோல் இருந்தவிடம் தெரியாதபடி கசடறப் போக்குமோ? யாதொரு வேதாந்ததேசிகனுடைய கருணையானது ஒருவிதமான கர்மாநுஷ்டானங்களைச் செய்யாதவர்களைக்கூட நல்ல கதியை அடையச்செய்து உய்விக்கிறதோ? அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீ வேங்கடநாததேசிகன் நமக்கு அடைக்கலமாக ஆகட்டும்.]

ஸ்ரீ:

நம்மாழ்வாரும் நம்முடை நம்பெருமானும்

ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், புராணம், ராகவாசார்ய ஸ்வாமி,
வியாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலே, மதுராந்தகம்.

பரம காருணிகனுன ஸர்வேச்வரன் இவ்வுலகைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளங்கொண்டு பற்பல அவதாரங்களே எடுக்கின்ருன். ஆழ்வார்களாய் அவதரித்ததும் இவற்றுளடங்கியதே. 'பராங்குச பரகாலா திருபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி' என்கிற ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனது ஸ்ரீஸூக்தியில் இவ்வர்த்தத்தைக் காண்கிறோம். இப்படி யவதரித்த ஆழ்வார்கள் ஆங்காங்கு அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானேத் திருவடி தொழுது பக்திபாரவசர்களாய் அந்தந்த மூர்த்திவிஷயமாகப் பற்பல ப்ரபந்தங்களே அநுக்ரஹித்தார்கள். இப்ரபந்தங்களேயே 'திவ்ய ப்ரபந்தம்' என்றும் 'நாலாயிரம்' என்றும் பெரியோர் கூறுவர். ஆழ்வார்கள் திவ்யதேசத்தெம் பெருமான்களே மங்களாசாஸனம் செய்த ரீதி இரு வகைப்பட்டது. எம்பெருமானே காருண்யவிசேஷத்தினுல் ஆழ்வார் எழுந்தருளியிருக்குமிடம் செல்ல, அவனே ஆழ்வார் பக்திபரவசத்துடன் மங்களாசாஸனம் செய்தல் முதல் வகையாகும். இவ்வகையைத்தான் நம்மாழ்வார் இசைந்து எம்பெருமானே மங்களாசாஸனம் செய்தருளினர். ப்ரதானமான எம்பெருமான் தன் முகோல்லாஸத்தை விரும்பி அப்ரதானமான ஆழ்வாரிருக்குமிடம் செல்வதை வ்யாகரண சாஸ்த்ர மறிந்தவர்கள் 'யதோத்தேச'ந்யாயத்தைக் கொண்டு ரஸிப்பார்கள். ப்ரதானமான விதிவாக்கியங்கள் அப்ரதானமான பரிபாஷைகளிருக்குமிடம் சென்று தன் உபகாரத்தைப் பெறுகின்றன என்பதன்றே யதோத்தேசநீதியின் கருத்து. இந்த நீதியை யநுஸரித்து நம்மாழ்வார் ஒருவரே எம்பெருமானே மங்களாசாஸனம் செய்தவர். எம்பெருமான் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களே யடைந்து அர்ச்சாமூர்த்தியான பகவானேத் தொழுதுப் பாடி மகிழ்தல் இரண்டாவதுவகையாகும். மற்ற ஆழ்வார்கள் யாவரும் இவ்வகையை யநுஸரித்தவர்களே. இந்த வகையைக் 'கார்யகாலந்யாய' மென வையாகரணர்கள் கூறுவர். ப்ரதானமான விதிவாக்கியங்களிருக்குமிடம் சென்று பரிபாஷைகள் உபகாரம் செய்யும் என்பது கார்யகாலநீதியின் கருத்தாகும்.

திருமங்கையாழ்வார் ஒரு திவ்யதேசத்தெம்பெருமானே மங்களாசாஸனம் செய்யும்போது இவ்வாழ்வாரின் பக்திவிசேஷத்தாலே வசீகரிக்கப்பட்ட வேருெரு திவ்யதேசத்தெம்பெருமானும் அப்போதே காட்சியளித்துத் தன்னே மங்களாசாஸனம் செய்விக்கின்ருன். கடன் மல்லேத் தலசயனத்தெம்பெருமானே மங்களாசாஸனம்செய்யும்போதே 'நின்றவூர் நித்திலத்தை' என்று திருநின்றவூர் எம்பெருமானேயும் மங்களாசாஸனம் செய்வதாகக் காட்டும் திருமங்கையாழ்வாரின் ஸ்ரீஸூக்தியா லறியலாம். இப்படி ஒரே இடத்தில் ஒரே காலத்தில் இரு திவ்யதேசத்தெம்பெருமான் மூர்த்திகளே யநுபவித்து ரஸித்த திருமங்கையாழ்வார் தனக்கு மார்க்கதர்சியான நம்மாழ்வாருக்கும் 'திருவாட்டாறு' என்ற திருப்பதியில் இப்படிப்பட்ட அநுபவவிசேஷமிருப்பதைக் காண்கின்ருர். பாகவதர்கள் தன்னெஞ்சினலன்றே நோக்கிக் காண்பர்! திருவாட்டாற்றெம்பெருமானே ஸ்ரீ ந்ருஸிம்ஹமூர்த்தியாக மங்களாசாஸனம் செய்தருளும் நம்மாழ்வார், அப் பெருமான் விண்ணுலகம் தருவானுய் விரைந்து, செழும்பறவைதானேறித் திரிகின்ருன் என்ற கருத்துத் தோன்றக் கூறியருளியதைக் கண்ணுற்று மங்கையர்கோன் மட்டிலா மகிழ்ச்சி கொள்கின்ருர். திருவாட்டாற்ருனே மங்களக் சாஸனம் செய்யும் நம்மாழ்வாருக்கு ஒன்பது ந்ருஸிம்ஹமூர்த்தியாய் சிங்கவேழ்குன்றத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே பரம க்ருபையாலே காட்சியளித்துத் தன்னே மங்களாசாஸனம் செய்வித்தருளினன் என்

பதை உணர்கின்றார். இவ் விஷயத்தைச் சிங்கவேழ்குன்றம் சென்று அஹோபிலநாதனைத் தாம் மங்களாசாஸனம் செய்யும்போது வெளியிடுகின்றார். இவ் விஷயத்தை நம்மாழ்வாரின் திருவாட்டாற்றான் பாசுரத்தையும், மங்கையர்கோனின் சிங்கவேழ்குன்றத்தான் பாசுரத்தையும் கொண்டு விளக்குவோம்.

நம்மாழ்வார் செய்தருளிய திருவாட்டாற்றான் விஷயமான நாலாம் பாட்டு வருமாறு:-

'என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கிருந்த
தமிழ்நூலிவை மொழிந்து
வன்னெஞ்சத்திரணியனை மார்விடந்த
வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்
காப்படைதொட்டான்
நன்னெஞ்சே! நம்பெருமான் நமக்கருள்—
தான் செய்வானே' என்று.

வஞ்சநெஞ்சம் கொண்ட இரணியனை ஸம்ஹரித்த பகவானே என் மனத்துள்ளிருந்து ஆழ்ந்த கருத்துக்கள் பொருந்திய திருவாய்மொழி என்னும் இருந்தமிழ்நூலை யியற்றச் செய்தான். மேலும் பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் ஆயுதம் தொடேன் என்று சபதமிட்டிருந்தும் பீஷ்மர் முதலிய க்ஷத்திரியவீரர்கள் அஞ்சும்படி ஆயுதமேந்திப் பாண்டவர்களைக் காத்தான். நல்ல என் மனமே! நமக்கு ஸ்வாமியான இவன் பரிபூர்ணமாக நமக்கருள் செய்வான் என்பது இதன் கருத்து. இப்பாட்டினால் நம்மாழ்வார் வெளியிடும் விஷயங்கள் மூன்று. ஹிரண்யஸம்ஹாரம் செய்த ஸ்ரீ ந்ருஸிம்ஹரூபியாகத் தன்னெஞ்சத்துள்ளிருந்த பகவானே தன்னைத் திருவாய்மொழி யியற்றும்படி செய்தான் என்பது முதலாவது ஆகும். இப்படி எம்பெருமான் வீற்றிருந்தருளும் பேறு பெற்ற தன் நெஞ்சமே நல்நெஞ்சமென்பது இரண்டாவதாகும். இப்பேற்றை தனக்கருளிய பரமனே 'நம்பெருமான்' ஆவானென்பது மூன்றாவதாகும்.

இனித் திருமங்கைமன்னன் சிங்கவேள்குன்றத்தெம்பெருமானை மங்களாசாஸனம் செய்தருளும் பாட்டின் சீர்மையை யநுபவிப்போம்:-

'நல்லை நெஞ்சே! நாம் தொழுதும்
நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்க நின்ற
ஆயிரந்தோளனிடம்
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப்
புல்லிலையார்த்ததர்வாய்ச்
சில்லு சில்லென்றொல்லறாத
சிங்கவேள்குன்றமே'

'பகவதநுபவத்துக்குப் பாங்கான வாய்ப்பு பெற்ற நெஞ்சமே! நாம் சிங்கவேள்குன்றம் தொழுது உய்வோம். இங்கு தான் தாமரையில் வாழும் திருமகளை யணைக்கவேண்டி ஆயிரக் தோள்கொண்ட நம்முடைய நம்பெருமான் நித்யவாஸம் செய்தருள்கின்றான். நெல்லிமரங்கள் செழித்து வேரோடிப் பிளக்கும் பாறையோசையும் மூங்கில் இலையோசையும் சில்லியென்னும் ஒருவகைப் பறவையொலியும் பொலிந்து நின்றது இச் சிங்கவேள்குன்றமாகும்' என்பது இதன் கருத்து. அடுத்துள்ள நிகமனப்பாட்டில் திருமங்கைமன்னன் தம்மை 'இருந்தமிழ்நூற்புலவன்' என்றும் தமது பாக்களை 'செஞ்சொல்மாலை' என்றும் கூறியருளுகின்றார்

ஸ்ரீ ந்ருஸிம்ஹமூர்த்தியை விஷயீகரித்த திருவாட்டாற்றான் பாட்டு சிங்கவேள்குன்றத்தானையேபற்றியதென்று கருதி, அதுதோன்ற சிங்கவேள்குன்றத்தானைத் தாம் மங்களாசாஸனம் செய்யும்போது அவன் செய்த ஹிரண்யஸம்ஹாரப்ரகாரத்தை விசேஷமாக வர்ணித்தும் 'நல்ல நஞ்சே' 'நம் பெருமான்' என்றுதிருவாட்டாற்றான் பாட்டிலிருப்பதையநுஸரித்து இங்கும் 'நல்லை நெஞ்சே' 'நம்முடை நம் பெருமான்' என்று மொழிந்துமிருக்கிறார். தனக்கு மார்க்கதர்சியான நம்மாழ்வாரால் நம்பெருமானெனப் பேசப்படுபவனை நம்மாழ்வாரின் அநுபவமூலமாகத் தானநுபவிக்கும்போது திருமங்கையாழ்வார் 'நம்முடை நம்பெருமான்' என அகமகிழ்ந்து மொழிவது சாலப் பொருந்துமன்றோ! மேலும், 'அல்லிமாதர் புல்க நின்ற ஆயிரந்தோளன்' என்று கூறுமுகத்தினால் சடகோபநாயகியார் திருவாய்மொழி என்னுமாயிரம் பாக்களாலணைந்துகொள்ள அதற்கேற்பத் தானுமாயிரந்தோளனான் நம்பெருமான் என்று த்வனிப்பிக்கிறார். இவ்வெம்பிரானல்லவோ 'இருந்தமிழ்நூலிவை மொழிந்தா'னென நம்மாழ்வாரால் பேசப்பட்டான். பின்னும், 'இருந்தமிழ்நூலிவை மொழிந்து' என்கிற திருவாட்டாற்றான் பாட்டின் கருத்தறிந்தவன் தானென்பதை 'இருந்தமிழ் நூற் புலவ'னெனத் தம்மைக் கூறுமுகத்தினால் வெளியிடு

கிறார். 'செஞ்சொல்லை' என்று திருவாட்டாற்றான் பாட்டில் நம்மாழ்வார் கூறியருளியது போலவே இங்கும் திருமங்கைமன்னன் 'செஞ்சொல்மாலை' யென்று தமது ப்ரபந்தத்தைக் குறிப்பிடுகிறார். இப்படி நம்மாழ்வார் சிங்கவேள்குன்றத்தானை மங்களாசாஸனம் செய்ததைக் குறிப்பாலுணர்ந்த திருமங்கை மன்னன் நம்போல்வாருய்யும்படி தமது பாட்டுக்களால் வெளியிட்டருளினான். இப்படியிவ்விரண்டு ஆழ்வார்களின் அநுபவத்தினால் நாம் அறியும் பொருள் வருமாறு:- அடியார்க்கு விண்ணுலகைத் தர விரும்பிச் செழும்பறவை ஏறித் திரிகின்றான் சிங்கவேள்குன்றத்து எம்பெருமான் என்று. ऋषीणां पुनराद्यानां वाचमर्थोऽनुधावति' (பழங்காலத்து முனிவர்களுடைய சொல்லைத் தொடர்ந்து பொருள் செல்லும்) என்கிறபடியே இவ்வாழ்வார்களின் ஸ்ரீஸூக்தியை யநுஸரித்து இன்றும் சிங்கவேள்குன்றத்தெம்பெருமான் ஸ்ரீ அஹோபிலமடத்துள்ளிருந்து லோகரக்ஷணத்துக்காக ஸஞ்சரிக்கும் அழகு உலகெலாமறிந்ததே. அடியார்க்கு வான் தர விரும்பிய தமது திருவுள்ளத்தை வெளியிட்ட நம்மாழ்வார்பக்கலிலே தமக்குள்ள காருண்யவிசேஷம் தோற்றச் சிங்கவேள்குன்றத்தானும் தாம் ஏற்படுத்திய மடத்தின் முதல் நிர்வாஹகராக வந்த மஹானுக்கு 'சடகோப ஜீயர்' என்று தாமே தித்நாமமிட்டருளினான். ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் குறிப்பறிந்த ஸ்ரீமதாதிவண்ஶடகோப ஜீயரும் மடத்தின் நிர்வாஹத்தை ஏற்றவுடனேயே ஆழ்வார்திருநகரி சென்று வேறு மதத்தினரால் சுனையிலிடப்பட்ட நம்மாழ்வாரைக் கண்ணி நுண்சிறுத்தாம்பினால் துதித்து மறுபடியும் திருக்கோயிலில் ப்ரதிஷ்டிதராகச் செய்தருளினார். பின்னும், தாமும் தமக்குப் பின் வரும் யதிவரர்களும் 'ஸ்ரீ ஶடகோபஸ்ரீ:' என்றே ஸ்ரீமடத்தின் நிர்வாஹஸூசகமாகத் திருக்கையெழுத்துச் சாத்தும்படி நியமத்தை இட்டருளினார்.

இப்படிக் கலியனாரை குடிகொண்ட கருத்தைக் காட்டுவதாலும் சிங்கவேள்குன்றத்தான் பெருமையைப் பேசுவதாலும் இக் கட்டுரை ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுக்கும், ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும் சிங்கவேள் குன்றத்தானுக்கும் பேருவப்பையளிக்குமெனச் சிறியேன் துணிகின்றேன்.

अनघगुणनिधेः श्री केशवस्य प्रसादात् शठरिपुकलिजेत्रोर्भावमेवं यथावत् ।
सरलकविरिति श्रीराघवोऽयं विवृण्वन् नृहरिचरणसेवाकामुकैर्वीक्षणीयः ॥

अमुना तपनातिशायिभूम्ना यतिराजेन निबद्धनायकश्रीः ।
महती गुरुपङ्क्तिहारयष्टिर्विबुधानां हृदयङ्गमा विभाति ॥ [யதிராஜஸப்ததி-15.]

(ஸூர்யனைக் காட்டிலும் அதிஶயிதமான தேஜஸ்ஸையுடையவரான இந்த யதிகளுக்கு ராஜாவான ஸ்ரீ பாஷ்யகாரராலே, நடுவில் வைத்துக் கட்டப்பட்ட நாயகரத்நத்தின் சோபையையுடையதாயும் பெரியதுமான குருபரம்பரையாகிற முக்தாஹாரமானது வித்வான்களுக்கு மனோஜ்ஞமாக விளங்குகிறது. உயர்ந்த முத்துக்களாலான ஒரு ஹாரமானது நடுவில் நாயகக் கல்லின் சேர்க்கையால் அதிக ப்ரகாசத்தையடைவது போல் நம குருபரம்பரையும் நடுவிலுள்ள யதிராஜரது ஸம்பந்தத்தால் "ஸ்ரீ பகவத்ராமாநுஜதர்சநம்" என்று அனைவரும் புகழக்கூடிய பெருமையுடன் விளங்குகிறது என்றபடி.)

ஸ்ரீ:

கத்யத்ரயமும் ஸ்ரீதேசிகனும்

ஸ்ரீ. உப, அத்தி, கிருஷ்ணமாச்சாரியர் ஸ்வாமி, ந்யாயாத்யாபகர்
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

நமது தர்சனஸ்தாபகரான ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த 'சரணாகதிகத்யம் ஸ்ரீரங்ககத்யம்' 'ஸ்ரீவைகுண்டகத்யம்' என்கிற கத்யம் மூன்றையும் சேர்த்து 'கத்யத்ரயம்' என்று வழங்கிவருகிறோம். ச்லோகரூபமாக அமைந்த காவியம் 'பத்ய' காவியமென்றும், வாக்யரூபமாக அமைந்த காவியம் 'கத்ய' காவியமென்றும் ஸாஹித்ய சாஸ்திரஜ்ஞர்களின் ஸங்கேதம். ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த இம்மூன்றும் வாக்யரூபமாக இருப்பதால் இதை 'கத்யத்ரயம்' என்று பெயரிட்டு பெரியோர்கள் வழங்கிவருகின்றனர். 'கத்யத்ரயம்' என்ற இப்பெயர் ஸ்ரீபாஷ்யகாரரே இட்டருளினது என்று சொல்ல ப்ரமாணம் தென்படவில்லை. 'சரணாகதிகத்யத்தை' ப்ருஹத்கத்யமென்றும், ஸ்ரீரங்ககத்யத்தை 'மிதகத்ய'மென்றும் வ்யவஹரிப்பதுண்டு என்று ஸ்வாமி தேசிகனின் '[illegible]' என்கிற ச்லோகத்தினால் அறிகிறோம். இம்மூன்று ப்ரபந்தங்களும் நம் ஸித்தாந்தத்திற்கே உயிர்நிலையாய் இருக்கும். ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையும் அதை அநுஷ்டிக்கும் மந்திரமாகிய த்வயத்தின் அர்த்தத்தையும், அதை அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தையும், விரிவாகவும் தெளிவாகவும் உபதேசிப்பவைகளாக அமைந்துள்ளன. இவ்விஷயத்தில் '[illegible]' என்கிற தேசிகன் ஸ்ரீஸூக்தியே போதியசான்றாகும். ப்ரபன்னனாகிற குழந்தைக்கு தாய்ப்பாலைப்போல தாரக, போஷக, போக்யமாக இருக்கும் த்வயத்தை விவரிப்பதாலும் பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளைத் தெளிவாக உபதேசிப்பதாலும், மற்ற க்ரந்தங்களைக்காட்டிலும் நம் ஆசாரியர்கள் கத்யத்ரயம் என்கிற ஸமுதாயநாமத்தைப் பெற்ற இம்மூன்று க்ரந்தங்களை மிகவும் ஆதரித்துப் போருவர்கள். இக்காரணங்களாலேயே மற்ற க்ரந்தங்களில் ஈடுபடத் தகுந்த ஜ்ஞானசக்த்யாதிகளும், அவகாசமும் இல்லாதவர்கள் இக்கத்யங்களை ஓர் ஸதாசாரியன் ஸந்நிதியில் அதிகரித்து உஜ்ஜீவிக்கவேண்டும்.

இக்கத்யத்ரயம் ஸ்ரீரங்கமென்னும் பெரிய கோயிலில் பங்குனி உத்திரத் திருநாளன்று ஸ்ரீரங்கநாதனுடையவும், ஸ்ரீரங்கநாயகியினுடையவும் சேர்த்தியிலே அவதரித்ததென்று ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் சொல்லுவார்கள். இப்பொழுதும்கூட ஸ்ரீரங்கத்தில் பங்குனி உத்திரத்திருநாளில் பெருமாள், தாயார் சேர்த்தியின் திருவோலக்கத்தில் இக்கத்யத்ரயம் அநுஸந்திக்கப்படுகிறது. ஆனாலுமிவைகள் எங்கே? எப்பொழுதவதரித்தன? என்பதைப்பற்றி பூர்வாசார்யர்கள் வ்யக்தமாக எழுதிவைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஸ்வாமி தேசிகன் கத்யபாஷ்யத்தில் '[illegible]...' என்றும், '[illegible]' என்றும் அருளிச்செய்திருப்பதினால் ரங்கநாதனுக்கும் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் நடந்த ஸம்வாதமே கத்யமாக பரிணமித்ததென்று ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட பெருமைபொருந்திய கத்யத்ரயத்திற்கும் கத்யங்களில் ஒன்றாகிய சரணாகதி கத்யத்திற்கும் பலவாசார்யர்கள் வ்யாக்யானம் செய்துள்ளார்கள். ப்ரசாரத்திலுள்ள வ்யாக்யானங்கள் தத்காலம் மூன்றே. ஒன்று

து ச்ருதப்ரகாசிகாசாரியர் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருதவ்யாக்யானம். இரண்டாவது பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த மணிப்ரவாள வ்யாக்யானம். மூன்றாவது ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருதவ்யாக்யானம். தேசிகனின் கத்யபாஷ்யம் முதல் சூர்ணிகையிலுள்ள 'அகிலஜகந்நாதம்' என்கிற பதவ்யாக்யானத்தின் முடிவிலுள்ள 'அஸ்மந்நாதமிதி த்ரவிடே ஶ்ரீவிஷ்ணுசித்தாதயஃ வதந்தி வ்யாசக்ஷதே ச' என்கிற பங்க்தியினாலேயும் சதுச்ச்லோகியின் இரண்டாவது ச்லோகபாஷ்யத்திலுள்ள 'உக்தம் ச விஷ்ணுசித்தைஃ கத்யவ்யாக்யானே' என்கிற பங்க்தியினாலேயும் ஸ்ரீவிஷ்ணுசித்தர் என்கிற எங்களாழ்வான் இக்கத்யத்திற்கு வ்யாக்யானம் செய்திருப்பதாகத் தெரிகிறது. ப்ரசாரத்திலுள்ள மூன்றிலொன்றான ஸ்ரீதேசிகபாஷ்யத்திலுள்ள விசேஷங்களை திங்மாத்திரம் ப்ரதர்சனம் செய்கிறோம்.

இக்கத்யத்திற்கு ஸ்வாமி தேசிகன் பரமக்ருபையால் தமக்கேயுரியதாயும் அதிமதுரமானதுமான நடையில் கத்யத்தில் ஒரு பதத்தைக் கூட விடாமல் ப்ரமாணபுரஸ்ஸரமாய் மிகவழகாக வ்யாக்யானம் செய்திருப்பதை காணும்தோறும் 'இவரல்லவோ வ்யாக்யாத்ருஸார்வபௌமர்' ஸ்ரீபாஷ்யகாரரது திருவுள்ளத்தை அறிந்தவர்; இவரல்லது வேறொருவருமில்லை' என்று வாயாரப் புகழ்வார்களென்பது திண்ணம்.

ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த சரணாகதி கத்யத்திற்கு வ்யாக்யானம் செய்யப் புகுந்த ச்ருதப்ரகாசிகாசாரியர் 'உபாயோபேயபரம் த்வயம் விஶதீக்ரியதே' என்று இவ்வளவே அவதாரிகையிட்டு வ்யாக்யானம் செய்யத் துடங்கினார். த்வயத்தின் பூர்வகண்டத்தில் உபாயமான சரணாகதி ப்ரதிபாதிக்கப்படுவதாலும் உத்திரகண்டத்தினால் உபேயமான பகவத் கைங்கர்யம் ப்ரதிபாதிக்கப்படுவதாலும் த்வயம் உபாயோபேயபரமாக ஆகிறது. அப்படிப்பட்ட த்வயத்தின் அர்த்தம் விவரிக்கப்படுகிறது என்று இவ்வாக்யத்தின் அர்த்தம். ஸ்வாமியோவென்றால் 'அத்ர பகவாந் பாஷ்யகாரஃ ஸதாசார்யபரம்பராப்ராப்தத்வயப்ரவசநேந ஸ்வயமநுஷ்டிதம் ந்யாஸவித்யாவிஶேஷம் ஸ்வாநுபந்திஸகலஜிஜீவிஷயா யதாவத்ப்ரகாஶயந் ... ... ஶ்ரீப்ரணதி ததநுக்ரஹலப்தப்ரவ்ருத்திகம் ஸ்வஸ்ய பகவதா ஸஞ்ஜாதம் ஸ்வயம் ப்ரயோஜநஸம்வாதவிஶேஷம் நிபத்நாதி' என்று அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களை புகுத்தி வெகு அழகாக அவதாரிகையிட்டருளினார். பூஜ்யரான ஸ்ரீபாஷ்யகாரர் தமக்கு ஸதாசார்யபரம்பரையினால் கிடைத்த த்வயமந்திரத்தின் ப்ரவசனமுகத்தாலே தாமநுஷ்டித்த ந்யாஸவித்யையை (ப்ரபத்தியை) தன்னைச் சேர்ந்த ஜனங்களையும் உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தினால் உள்ளபடி வெளியிடாநின்று பெரிய பிராட்டியாரை வணங்கி அவளுடைய அநுக்ரஹத்தையும் பெற்று தமக்கும் பகவானுக்குமுண்டான ஸ்வயம்ப்ரயோஜனமான ஸம்வாத விசேஷத்தை ஒரு ப்ரபந்தமாக இட்டருளுகிறார் என்று இவ்வாக்யத்தின் பொருள். இதில் 'ஸ்வயமநுஷ்டிதம் ந்யாஸவித்யாவிஶேஷம் ஸ்வாநுபந்திஸகலஜிஜீவிஷயா யதாவத்ப்ரகாஶயந்' என்பதே முக்கியமான அம்சம். யதாசாஸ்திரம் பக்திப்ரபத்திகளிரண்டும் மோக்ஷஸாதனங்களாகையாலே பக்தியாகிற உபாயத்தை ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலியக்ரந்தங்களி லுபபாதித்தருளிப்ரபத்தி ஸாக்ஷாத் மோக்ஷோபாயம் என்கிற அர்த்தத்தையும் அதிலும் அங்கவைகல்யம், அங்கிவைகல்யம் இது முதலியவைகளிருந்தபோதிலும் உக்தி மாத்திரமே போதுமென்னும்படி நிற்கிற ப்ரபத்தியின் ப்ரபாவத்தையும் தம்மைச் சேர்ந்தவர்களும் அறிந்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் 'ஸ்வயமாசரதே' என்கிறபடி தானும் ப்ரபத்தியை அநுஷ்டித்து அதை உள்ளபடி ப்ரகாசித்தருளினார் என்று தேசிகன் திருவுள்ளம். ஆகவே இதனால் இதற்கு சரணாகதி கத்யம் என்று பெயர்

வந்த காரணமும் இக்கிரந்தம் அவதரித்த காரணமும் ஸூசிதமாயிற்று.

இப்படிப்பட்ட விவரணம் தேசிகன் தவிர மற்ற வ்யாக்யாதாக்கள் வ்யாக்யானித்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலும் ஸாத்யோபாயசோதநாதிகாரத்திலுள்ள இப்ப்ரபத்தி அங்கமான வேஷத்தைப் பாஷ்யாதிகளிலே உதாஹரித்தருளினர். ஸ்வதந்திரமான வேஷத்தை கத்யத்திலேயருளிச்செய்தார் என்கிற ஸ்ரீஸூக்தியுமிவ்வர்த்தத்திற்கு ஸம்வாத ப்ரமாணமாகும்.

இந்த சரணாகதிகத்யத்தில் ‘அநந்யசரண:’ என்று ஸங்க்ரஹமாகச் சொல்லப்பட்ட ஆகிஞ்சந்யமாகிற அதிகாரமும் அதன் அநுஸந்தாநமாகிற கார்ப்பண்யமென்கிற அங்கமும் மஹாவிச்வாஸத்தின் ஸ்வரூபமும் கோப்த்ருத்வவரணமும் உக்திமாத்திரமே போதுமென்கிற ப்ரபத்தியின் ப்ரபாவமும் விசதமாக ஸ்ரீரங்ககத்யத்தில் அருளிச்செய்யப்பட்டது. சரணாகதிகத்யத்திலும் ‘இதி வசநாத் ஸோம் தாரய’ என்கிற வாக்யத்திலுள்ள வக்த்ருபத ஸ்வாரஸ்யத்தினால் இவ்வர்த்தம் (உக்திமாத்திரம் போதுமென்கிற அர்த்தம்) அங்கேயே ஏற்படுகிறது. ஆனால் ஸ்ரீரங்ககத்யத்தில் ஸ்பஷ்டமாக உள்ள ‘ஸ்ருத்வாரணோ த்ராவமம்பெ ரெநந’ என்கிற பதத்திலுள்ள மாத்ரபதஸ்வாரஸ்யத்தினால் உக்திமாத்திரமே போதுமென்கிற அர்த்தம் த்ருடீக்ருதமாகிறது. இப்படி ப்ரபத்தி செய்தவனுக்கு உத்தரகாலத்தில் வரப்போகிற கண்ணாளத்திற்கு நாள் எண்ணிக் கிடக்குமாப்போல ஸ்வயம் ப்ரயோஜனமான புருஷார்த்தாநுஸந்தானமும் அதில் ருசி வளர்ந்துவரவேண்டுமென்பதும் த்வரையும் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் அருளிச்செய்யப்பட்டது.

—0⁰0—

न वेदान्ताच्छास्त्रं न मधुमथनात्तत्त्वमधिकं
न तद्भक्तात्तीर्थं न तदभिमतात्सात्त्विकपदम् ।
न सत्वादारोग्यं न बुधभजनात् बोधजनकं
न मुक्तेस्सौख्यं न द्वयवचनतः क्षेमकरणम् ॥

(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் - 67)

[வேதாந்தங்களைக் காட்டிலும் உயர்ந்த சாஸ்த்ரம் இல்லை. மதுஸூதனனை பகவானைவிட உயர்ந்த தத்துவம் இல்லை. அந்த பகவானிடத்தில் பக்தியுள்ளவனைக் காட்டிலும் பாபத்தைப் போக்கும் உயர்ந்த வஸ்து வேறு இல்லை. அந்த பாகவதர்களுக்குப் பிடித்தமான இடத்தைக் காட்டிலும் ஸத்வோத்தரமான வேறு இடம் இல்லை. ஸத்வகுணம் மேலிட்ட ஆஹாரத்தைக் காட்டிலும் உடம்புக்கு ஆரோக்யத்தை உண்டுபண்ணுவது வேறு ஒன்றுமில்லை. நல்ல ஜ்ஞானமுள்ள ஆசார்யனை அடைவதைக் காட்டிலும் அறிவை உண்டுபண்ணுவது வேறு இல்லை. மோக்ஷத்தைக்காட்டிலும் ஸுகம் வேறொன்றில்லை. த்வயத்தைச் சொல்லுவதைக் காட்டிலும் க்ஷேமத்தை உண்டுபண்ணுவது வேறு இல்லை.]

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

20-9-56 ராத்திரி உத்தானமாகப் புறப்பட்டு 4 மைல் தூரத்திலுள்ள கிஷான்பாக் வேணுகோபாலன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். முன்பு அங்கிருந்துதான் ஹைதராபாக்திற்கு எழுந்தருளினபடி. ஸ்ரீ மோடூர் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள் ஆராதித்து ராத்திரி டோலோத்ஸவமும் பண்ணி வைத்தார்கள். அநேக பக்தர்கள் வந்து பெருமாளை ஸேவித்தார்கள். 21-9-56 ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள பஞ்சாராமலையில் ஸ்ரீ கோவர்த்தனலால் ஸேத் பங்களாவிற்கு எழுந்தருளினார். அன்றிரவு புறப்படும்போது மழை இல்லை. பிறகு கனத்த மழை பெய்தது. அதனால் மறுநாள் விச்வரூபம் கொஞ்சம் தாமதித்து நடக்க வேண்டி வந்தது. 23-9-56 ல் பெரிய திருமஞ்சனம் பண்ணி வைத்து ராத்திரி டோலோத்ஸவமும் பண்ணி வைத்தார். மூன்று நாட்கள் ஆராதித்தார். மூன்று வெள்ளிப்பாத்திரங்களும் சால்வையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். அங்கிருந்து 16 மைலுள்ள சிலுக்கூர் (வெங்கடாபுரம்) அக்ரஹாரத்திற்கு எழுந்தருளி ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் கண்ணாடியறையில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ அழகியசிங்கர் கோயிலில் ஒரு பக்கம் எழுந்தருளியிருந்தாயிற்று. ஸ்ரீ ஸந்நிதி காரியங்களைப் பார்த்து வருபவரும், முத்திரைகர்த்தாவுமான ஸ்ரீ. ஸி. வி. வெங்கடராகவாசாரியரும் அவர் தகப்பனார் தம்பிகளும் அன்று ஆராதித்து ராத்திரி டோலையும் செய்து வைத்தார்கள். அவ்விடத்தில் அநேக சூத்ரசிஷ்யர்கள் ஸமாச்ரயணம் பண்ணிக்கொண்டார்கள். அங்கிருந்து மறுபடியும் 14 மைல் தூரமுள்ள கியான் பாக்கிற்கே எழுந்தருளினார். 26-9-56 ல் ஸ்ரீ கோவர்தனலால் சேட் தமையன் பன்னாலால் பிட்டி என்பவர் ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்து பெருமாளுக்கு சால்வையும் ஸமர்ப்பித்தார். அன்று ராத்திரி புறப்பட்டு ஸிகந்தராபாத்திலுள்ள மாரட்பள்ளிக்கு எழுந்தருளினார். அங்கு வெள்ளிமேடு, ஸ்ரீ வீரராகவாசாரியர் முதலியவர்கள் 27-9-56 முதல் 29-9-56 வரையில் மூன்று நாட்கள் ஆராதித்தார்கள். அடிக்கடி மழை பெய்து கொண்டிருந்தாலும் அநேகம் ஜனங்கள் அவ்விடத்திற்குவந்து பெருமாளை ஸேவித்துவிட்டுச் சென்றார்கள். முதல் இரண்டு நாட்களும் டோலை நடத்திவைத்தார்கள். 28-9-56 ல் பெரிய திருமஞ்சனமும், 29-9-56 ல் பெரிய பெருமாள் திருமஞ்சனமும் நடந்தது. ஸிகந்தராபாத்தில் வீதிப்ரமணம் (ஊர்வலம்) நடக்க வேணுமென்று அட்வொகேட் ஸ்ரீ. ரங்காசாரியர் ப்ரார்த்தித்ததால் அன்று மத்தியானம் (29-9-56) 4 மணிக்குப் பெருமாளுடன் தந்தப்பல்லக்கில் வீதிவலமாக அவ்வூரிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அங்கிருந்து மறுபடியும் ஊர்வலமாகவே அட்வொகேட், ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் க்ருஹத்திற்கு ஸாயங்காலம் எழுந்தருளினார். ஸ்ரீ ராமஸ்வாமிஐயங்காரும் அவர்பார்யை ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாளும் (ஏற்கனவே ஒரு நாள் பூர்ணமாக கியான்பாகில் ஆராதித்திருந்தும்) தங்கள் க்ருஹத்தில் ஆராதிக்கவேண்டுமென்கிற ஆஸ்தையினால் அன்று ஸாயங்காலம் ஆராதனத்தை விசேஷமாக நடத்திவைத்து ராத்திரி டோலையும் பண்ணிவைத்தார்கள். அன்றிரவே புறப்பட்டு ராஜாபஹதூர், ஸ்ரீ. எஸ். ஆராவமுதய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். முன்னால் கத்வால் ஸமஸ்தானத்திற்குப் பலவிதத்திலும் பிரதானராயிருந்ததோடு ஸ்ரீ ஸந்நிதிக்கும் வெகுகாலமாய் வேண்டியவராயும் விசேஷ அபிமானமுள்ளவருமான அவரும், அதே மாதிரியான அவர் குமாரரும் 30-9-56 ம், 1-10-56 ம் ஆராதித்தார்கள். 30-9-56 ல் எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்தார்கள். அன்று ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திரு

நக்ஷத்ரமஹோத்ஸவத்தை உத்தேசித்து வேத ப்ரபந்த க்ரந்தசதுஷ்டய பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. அன்று தான் 18-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம். ஸ்ரீ ஸந்நிதியில் பத்து நாள் நாலாயிரமும், ஸேவை நடக்கும் காலங்களில் ஏற்பட்ட க்ரமப்படி (அதாவது காலையில் முதலாயிரத்திலும், திருவாய்மொழியில் ஒரு பத்தும், தேசிகப்ரபந்தத்தில் ஒரு ப்ரபந்தமும், பிறகு ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தங்களும் ஸேவிக்கப்படுவது வழக்கம். ராத்திரி இயற்பாவும், பெரிய திருமொழியும், தேசிக ப்ரபந்தத்தில் ஒரு ப்ரபந்தமும், பிள்ளையந்தாதி ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தங்களும் ஸேவிப்பது வழக்கம். சாத்துமுறையில் வேதசாத்துமுறையானதும் அன்றன்று ஸேவிக்கும் ராமாயணம் விஷ்ணுபுராணம், பாகவதம் முதலியதுகள் சாத்துமுறையாகி, ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரமும் ஸேவிக்கப்பட்டு, பிறகு திருப்பாவை, திருமொழி, அஹோபிலம், திருவுள்ளூர் விஷயமான சாத்துப் பாசுரங்கள் ஸேவிக்கப்பட்டு. முதலாயிரத்திலும் சாத்துப்பாட்டு ஸேவிக்கப்பட்டு, திருவாய்மொழியில் சாத்துப்பாட்டு ஸேவித்து அதன் திருவாறாயிரமும் ஸேவிக்கப்பட்டு, பிறகு தேசிகப்ரபந்தம், ஸ்ரீ ஸந்நிதிப்ரபந்தம் சாத்துமுறையாகி, அந்தந்த ஆசார்யர்களுக்கு அருளிப்பாடு மரியாதையாகி, வாழித்திருநாமம் தனியன்கள் ஸேவித்து, தீர்த்தம் ஶடாரியாகி ஸ்தோத்ரபாடத்துடன் கோஷ்டிவிநியோகம் நடப்பது வழக்கம்.) கிரமப்படி அன்று காலையில் திருநக்ஷத்ர உத்ஸவம் நடந்தது. அன்று ஸாயங்கால்ம் அவர்களுடைய விசேஷ பிரார்த்தனையின்பேரில் 'ஸதுபதேசம்' என்பதைப் பற்றி விரிவாக உபந்யஸித்தாயிற்று. நகரத்திலுள்ள பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அன்று நடந்த ஸுப்ரபாதம், மந்த்ரபுஷ்பம், (தொடக்கம்) சாத்துமறை, ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யாஸம், தாம்பூலகோஷ்டி பாராயணம், ஸ்வஸ்திவாசநம் உள்பட எல்லாவற்றையும் அவர்கள் Tape recorder யந்திரத்தில் பதிய வைத்துக்கொண்டார்கள். இது விஷயத்தை மறுநாள் ஸ்ரீ ஸந்நிதியில் விஜ்ஞாபித்துக் கொண்டார்கள். அன்று ராத்திரியும் மறுநாளும் அவ்விடம் ஸேவை, பாராயணம் சாத்துமுறைகள் நடந்தன. இடம் விசாலமாயிருந்தபடியால் அநேகம் ஜனங்கள் ஸுகமாக அவ்விடம் பெருமாளை ஸேவித்தனர். முதல் இரண்டு நாட்களும் டோலை பண்ணிவைத்தார்கள் த்வாதசி ததீயாராதனை விசேஷமாக நடத்தி வைத்தார்கள். ஸ்ரீ ஆராவமுதய்யங்கார் குமாரர், ஹைகோர்ட் ஜட்ஜ். ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ அய்யங்காரும், அவர் பார்யையும் பெருமாள் ஹைதராபாத்திற்கு எழுந்தருளினது முதல் தவறாமல் விச்வரூபத்திற்கு வந்து ஸேவித்துக்கொண்டும், ஸ்ரீ ஆராவமுதய்யங்கார் அநேகமாக வேதபாராயணம் முடியும்வரையில் கூட இருந்து அநுபவித்து வருகிறபடியால் அது மறவாமலிருக்கும் பொருட்டு ஸுப்ரபாதம் முதல் சாத்துமுறை, ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யாஸம் இதுகளை அடிக்கடி கேட்க வேண்டியதற்காக அதை ரிகார்டு பண்ணிவைத்துக்கொண்டார்கள். பெருமாள் அபிகமன தளிகை அமுதுசெய்யும் பழைய வெள்ளி ஜோடுதவலையை மேற்கொண்டு நூறு ரூபாய் எடை வெள்ளி சேர்த்து தாளக்கூடையாகப் பண்ணி ஸமர்ப்பித்திருக்கிறார்கள். அது பெரிய திருமஞ்சனங்களுக்கு தீர்த்தம் வைத்துக்கொள்வதற்கும் வேண்டியிருந்தபடியால் அன்று திருமஞ்சனத்திலும் அந்த மாதிரி உபயோகப்படுத்தப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யாஸத்தில், நமது பழைய ஆசாரங்களை நாம் உபேக்ஷிப்பது தகாது என்கிற விஷயத்தை வற்புறுத்தி ஸாதிக்கும்படியிருந்தது. அத்துடன் மற்ற இடங்களைவிட ஹைதராபாத்தில் அது எல்லோருடைய மனதிலும் நன்றாகப் பதிந்து, சிலர் கிராப்புகளை விட்டுவிட்டு பழையபடி குடுமியுடன் எப்போதும் இனி இருப்பதாக உறுதியுடன், அப்படியே அநுஷ்டித்து, ஸ்ரீ ஸந்நிதியில் வந்து தெண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டு வருவதைப்பற்றித் திருவுள்ளம் உகந்து, எல்லோரும் கொஞ்சமும் கூச்சமில்லாமல் சீக்கிரத்திலேயே அதே மாதிரி ஆகவேண்டுமென்பதையும் அப்போதைக்கப்போது ஸாதித்துக்கொண்டுவருவதையும், அந்த உபந்யாஸத்திலும் குறிப்பாக

ஸாதிக்கும்படியிருந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள அலவால் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. அந்தக் கோவிலில் கண்ணாடி அறையில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். கவர்மெண்டில் பெருமாளை ஆராதிப்பதற்காக அநுமதித்த தொகையுடன் அவ்வூர் ஆராதகரும் அவ்வூர் வாஸிகளுமான ஸ்ரீ கோபாலாசாரியர் முதலானவர்களும் அந்த ஸந்நிதிக்குச் சொந்தக்காரர்களான மஹாராஜா கிஷன் ப்ரஸாத் வம்சஸ்தர்களும் இரண்டு நாள் ஆராதித்தார்கள். அந்தக் கோவில் ஸ்ரீ ஸந்நிதி அபிமானத்திலிருப்பதுடன் தீர்த்தம் முதலிய ஸகல மரியாதைகளும் ஸ்ரீ ஸந்நிதிக்கே உள்ளது. கோவில் விமானம் அர்த்தமண்டபம் பூராவும் அடியிலிருந்து நுனிவரை வெளிப்பக்கம் தங்க முலாம் பூசப்பட்ட தகடுகள் போடப்பட்டிருக்கிறது. முன்னாளில் அவ்விடம் அதி மிக செழிப்பாகவும் சிரத்தையுடனும் ஆராதிக்கப்பட்ட ஒரு சிறந்த ஸ்தலமாக இருந்தது என்பது தெரிகிறது. அதனாலேயே அங்கு எழுந்தருளியிருந்த 2 நாளும் ஹைதராபாதிலிருந்து பல பிரமுகர்கள் வந்து ஸேவித்தார்கள். முதல் நாள் அவ்விடமுள்ள கண்ணாடியறை எதிரில் வெள்ளிமண்டபத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். கண்ணாடியறை முன்னாளில் மிகவும் விசேஷமாக நிறைய கண்ணாடிகள் அமைக்கப்பட்டு, பளிங்குக் கல்லால் ஸிம்ஹாஸனம் அமைத்து நடுவில் வெள்ளிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ரொம்ப நாளாகிவிட்டபடியால் கண்ணாடிகள் மழுங்கியும் மற்ற வேலைப்பாடுகள் சிதிலமாயுள்ளபோதிலும் அமைப்பு நன்றாக உள்ளதை யுத்தேசித்து பெருமாளை அந்த வெள்ளிமண்டபதலக்கத்திலேயே எழுந்தருளப்பண்ண வேண்டுமென்று பெருமாள் தோன்றப்பண்ணுவதாக ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றி அப்படியே அந்த வெள்ளி மண்டபத்திலேயே முதல் நாள் ராத்திரியே எழுந்தருளப்பண்ணி அன்றுராத்திரியும் மறுநாளும் ஸேவை சாத்துமுறை கோஷ்டிகள் நடந்தன. ஸ்ரீரங்கம் தசாவதாரஸந்நிதியில் பெருமாள் எழுந்தருளியிருந்தது போல் இதுவும் ஒரு விசேஷமாக ஸேவை ஸாதிப்பதாக எல்லோரும் சொல்லிக்கொண்டு ஸேவித்தார்கள். மறுநாள் கிஷன்ப்ரஸாத் குடும்பத்தார்கள் டோலை நடத்தி வைத்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு மறுபடி கியான்பாக்கிற்கு எழுந்தருளினர். மழையின் உபத்ரவத்தினால் தங்கள் ஊர்களுக்கும் மற்றும் சுற்றுப்புர அக்ரஹாரங்களுக்கும் பெருமாள் எழுந்தருள முடியாமல் போய்விட்டது என்று ஸரிகொண்டா அக்ரஹாரவாஸிகளான ஸ்ரீ கோபாலாசாரியர் முதலியவர்கள் விஜ்ஞாபித்து விட்டு அன்று ததீயாராதனம் மட்டிலாவது தங்களுடையதாக இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து ததீயாராதனத்தையும் டோலையையும்நடத்தி வைத்தார்கள். 5-10-56 ல் ஆத்மகூர் அநந்த ரெட்டி ஸம்பந்தி டோலோத்ஸவம் பண்ணி வைத்தார். 7-10-56 ல் 33-வது பட்டம் ஸ்ரீ ஶடகோபமஹாதேசிகன் திருநக்ஷத்திரம் ஸேவை, சாத்துமுறை, ஸம்பாவனை, ஸ்ரீபாத தீர்த்தம் கோஷ்டிகள் நடந்தன. 9-10-56 ல் பருத்திச்சேரி, ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சநம் பண்ணி வைத்தார். விசேஷ ததிகைகள் அமுது செய்து, ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்திரம் வேதப்ரபந்தக்ரந்த சதுஷ்டயபாராயணாதிகள், சாத்துமுறை, ஸம்பாவனை, ஸ்ரீபாததீர்த்தகோஷ்டி நடந்தது. அன்றே ஷோலாப்பூரை உத்தேசித்து ஸஞ்சாரம் புறப்படுவதாயிருந்தும் ஸ்ரீ. எஸ். ஆராவமுதய்யங்கார், பருத்திச்சேரி, ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் இவர்கள், தங்களைச்சேர்ந்த கந்யாலால் முதலியவர்கள் திருமஞ்சநம்பண்ணி வைத்து ஆராதிக்க ஆசைப்படுவதாய் மிகவும் பிரார்த்தித்ததின் பேரில் மறு நாள் புதன் கிழமையும் அவ்விடமே எழுந்தருளியிருக்கும்படியாயிற்று. பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனமும் ததீயாராதனமும் அவர்கள் பண்ணிவைத்தார்கள். அன்று ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்திற்காக வேதப்ரபந்தபாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. அன்று 20-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோப...மஹாதேசிகன் திருநக்ஷத்திரம். அன்று ராத்திரி ஆராதநம் ஸேவை சாத்துமுறையானதும் ஸ்ரீமான் அட்வொகேட், என். நரஸிம்மய்யங்கார் பிரார்த்த

ணேயின்பேரில் ஸஞ்சாரமாகவே புறப்பட்டு அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளி, அங்கே டோலோத்ஸவம் ஆனபின்பு ஸ்ரீ. எஸ். ஆராவமுதய்யங்கார் பிரார்த்தனையின்பேரில் நடைவழி உபயமாக அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு 14மைல் தூரமுள்ள லிங்கம்பள்ளியில் ஒரு பங்களாவில் எழுந்தருளியிருந்தாயிற்று. ஹைதராபாத்திலிருந்து இஞ்ஜினீயர், ஸ்ரீவீரராகவஅய்யங்கார் ஜட்ஜ் ஸ்ரீ வ. ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீ சடகோபாசாரியர் முதலானவர்கள் அவ்விடம் வந்தார்கள். வண்டிகள் வர தாமதமானபடியால் இரண்டு மணி காலம் கழித்து அபிகமநம் நடந்தது. அங்கிருந்து 12 மைல் தூரத்திலுள்ள கொடகஞ்சிக்கு அவ்வூரார் பிரார்த்தனையின் பேரில் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றியாயிற்று. பிரதானரோட்டிலிருந்து கொடகஞ்சிக்குப் போகும் வழி, கிராமாந்திர காட்டு வழியாக இருப்பதுடன், நடுவில் பல நீரோடைகளைத் தாண்டிப் போகவேண்டியிருந்தபடியால் ஸரியான வழியைத் தெரிந்துகொண்டு போக முடியாமலிருந்ததுடன், வண்டிகளும் வருவதற்கு அஸௌகர்யமா யிருந்தபடியால் மெயின்ரோட்டிலுள்ள பட்டன்செருவுள்ள பங்களாவிற்குத் திரும்பி எழுந்தருளும்படியாயிற்று. அவ்விடம் அபிகமனம் இஜ்யை முதலிய ஆராதனங்களும் நடந்தன. கொடகஞ்சியிலுள்ளவர்கள் அனைவரும் அவர்கள் ஊர் வண்டிகள்ஸஹிதம் வந்து அன்று ராத்திரி ஸரியான வழி தெரிந்து வண்டிகள் வரமுடியாமல் போனதற்கு ரொம்பவும் க்ஷமைகொள்ளுமாறு பிரார்த்தித்து; எங்கள் வண்டிகளிலேயே ஸாமான்களை போட்டுக்கொண்டு போகிறோம்; அவசியம் எழுந்தருளவேண்டுமென்று ரொம்பவும் பிரார்த்தித்தார்கள். அந்தப்படியே திருவுள்ளம்பற்றி 12-10-56 மத்தியானம் 3மணிக்குப்புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள கொடகஞ்சிக்கு எழுந்தருளியாயிற்று. கொடகஞ்சியில் கோயிலின் த்வஜஸ்தம்பத்தின் அடி மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். கோவிலுக்குச் சேர்ந்தாற்போல் விசாலமான ஒரு கட்டடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. கடைகஞ்சி என்பது கொடகஞ்சி என்று திரிந்துவிட்டதாயும் 'கட' என்றால் கடைசி (சின்னது) என்று அர்த்தமென்றும், யானைபோலுள்ள ஒரு பெரிய கல்லின் மேல் கோவில் இருப்பதுடன், இது தான் கடைசியான காஞ்சி என்பதனால் அந்தப் பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். பெரிய மூன்று ஏரிகளுடனும் கோவிலுக்கு வடபுறம் ஏரியைச் சேர்ந்தாற்போல் அழகான புஷ்கரிணியுடன் நல்ல நீர்வளமுள்ள தேசமாயிருக்கிறது. அந்தக் கோவிலை பரம்பரையாக நிர்வஹித்து வருகிறவர்கள் ஸ்ரீ ஸந்நிதிசிஷ்யர்கள். 85 வயதுள்ள ஸ்ரீ ராமாநுஜன் என்பவர்தான் பெருமாளை ஊருக்கு எழுந்தருளப்பண்ணுவதற்காக மிகப்ரயத்னம் எடுத்துக்கொண்டவர். ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிகனிடம் ஸமாச்ரயணம் பண்ணிக்கொண்டதாகவும், நரஸிம்ஹபுரம், திருவுள்ளூரில் தனக்குச் சக்தியுள்ள காலத்தில் பெருமாளை ஸேவித்ததாகவும், ஸ்ரீ அழகியசிங்கர்களது பாதுகைகளையும் படங்களையும் கோவிலுக்குத் தென்புறத்தில் ஒரு ஸந்நிதியாகக்கட்டி அதில் வைத்து ஆராதித்து வருவதாயும் விஜ்ஞாபித்தார். அந்த தேவஸ்தானத்திலும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனையும் கூடியசீக்கிரம் ப்ரதிஷ்டை செய்யும்படி நியமித்தாயிற்று. அன்று ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்திரம் சாற்றுமுறையும் கோஷ்டி முதலியதுகளும் நன்றாக நடந்தன. கஞ்சி என்ற பெயர் உள்ளதற்கேற்ப ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்திரமும் அவ்விடம் நடந்தது பொருந்தியுள்ளதென்று ஸாதித்தாயிற்று. அன்று மத்தியானம் புறப்பட்டு ஸாயங்காலம் 6மணிக்கு மறுபடி பட்டன்செரு எழுந்தருளியாயிற்று. 14-10-56 அங்கேயே எழுந்தருளியிருந்தாயிற்று. அங்கும் ஹைதராபாத்திலிருந்து ஸ்ரீ வீரராகவாசாரியர் முதலியவர்கள் அபிகமனத்தில் பெருமாளை ஸேவித்துவிட்டுப் போனார்கள். அன்று மத்தியானம் புறப்பட்டு 7 மைல் தூரத்திலுள்ள சண்டி என்னுமிடத்திற்கு எழுந்தருளியாயிற்று.

(தொடரும்)